## அன்புக்குரிய வாசக நெஞ்சங்களே!

**வ**ணக்கம். மனிதனுக்கு கைவீக்கம், கால்வீக்கம் வரக்கூடாது. நாட்டுக்கு பணவீக்கம் வரக்கூடாது. ஆனால் இப்போது வந்து விட்டது. எப்படி வந்தது, ஏன் வந்தது என்று நிதியமைச்சர்க்கே தெரியவில்லை. விலைவாசி ஒருபுறம் விஷம் போல் ஏறிக்கொண்டு இருக்கிறது. 'அப்பர் மிடில் கிளாஸ்' என்று சொல்லப்படுகின்ற உயர்தர நடுத்தரக் குடும்பங்கள் (அதாவது சொந்தத்தில் வீடு கார் இருந்து கணவன் மனைவி இருவருமே நல்ல வேலையில் இருக்கின்ற குடும்பங்கள் 'அப்பர் மிடில் கிளாஸ்' என்று அழைக்கப்படுகின்றது.) கூட இன்றைக்கு மளிகைக் கடைக்குப் போனால் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கேட்டு அதிர்ந்து போய் நிற்கிறார்கள் என்றால் ஏழை மக்களின் நிலையைப் பற்றி சொல்லவே வேண்டாம். இந்த விலைவாசியையும் பணவீக்கத்தையும் எப்படி குறைப்பது என்று மத்திய அமைச்சர்கள் அடிக்கடி கூடிப் பேசுகிறார்கள். [illegible]ழி பிரச்னைக்கு தெரியாமல் இருண்டு போன முகங்களோடு அறையை விட்டு வெளியே வருகிறார்கள். நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் பரிதாபமாக எதிர்க்கட்சிகளைப் பார்த்து 'விலைவாசியையும் பண



கோயமுத்தூரிலிருந்து

**:.பேக்ஸ்**

(தொடர்ச்சி கடைசிப் பக்கத்தில்)

க்ரைம் 2008 150

**க**டந்த இரண்டு மூன்று மாதங்களாகவே நமது 'க்ரைம் நாவல்' மிக தாமதமாக வந்து கொண்டிருக்கிறது. ஸ்பெஷலும், ரெகுலரும் மாதம் இரண்டு என வந்தது, தற்போது இது ஒரு மாதம், அது ஒரு மாதம் என தாமதமாக வருகிறதே என நீங்கள் வருத்தப்படுவது தெரிகிறது.

பெரிய பெரிய பத்திரிக்கைகளே காகித விலை ஏற்றத்தால் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி சில, அளவை மாத்தியும் - சில, விலையை மாத்தியும் - சில பத்திரிகை [illegible]கத்தை குறைத்தும் உள்ளன.

ஆறு மாதங்களுக்கு முன் ஒரு டன் காகிதம் பத்தொன்பதாயிரம் முதல் இருபத்தி மூன்று ஆயிரம் வரை கிடைத்தது. தற்போது இந்திய தயாரிப்பு காகிதங்கள் 33 முதல் 35 ஆயிரம் ஆகிவிட்டது. வெளிநாட்டு காகிதமும் 44 ஆயிரம் வரை உயர்ந்து விட்டது. முன்பு பேப்பரை அனுப்பி விட்டு



### எடிட்டர் ஏரியா

(2ஆம் அட்டைத் தொடர்ச்சி)

வீக்கத்தையும் குறைக்க ஏதாவது வழி இருந் சொல்லுங்கள்' என்று கேட்கிறார். இந்த விலை பிரச்னை இப்படி பயமுறுத்திக் கொண்டு இருக்கும் தே இன்னொரு பிரச்னை பூதாகரமாய் உருவெடுத்துள் து. அதுதான் பெட்ரோல் மற்றும் டீசலின் விலை. பொதுத்துறை பெட்ரோலிய நிறுவனங்களான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் ஆயில் போன்றவை பெரிய நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இந்த நிறுவனங்களை சரிவில் இருந்து மீட்க பெட்ரோல் விலையை 10 ரூபாயும் டீசல் விலையை 5 ரூபாயும் சமையல் கேஸ் சிலிண்டர் விலையை 50 ரூபாயும் உயர்த்த வேண்டும், அல்லது வரிகளைக் குறைக்க வே ண்டும் என்று வாதம் செய்கிறார் பெட்ரோலியத்துறை அ ச்சர் முரளி தியோரா. வரிகளைக் குறைக்கவே முடியாது என்று முரண்டு பிடிக்கிறார் நம் நிதியமைச்சர்.

அது என்ன வரிகள் என்று கேட்கிறீர்களா? பெட்ரோல் ஒரு லிட்டரின் விலை உண்மையில் 23 ரூபாய்தான். அதன் மீதான வரிகள் 27 ரூபாய். இந்த இரண்டும் சேர்வதால் பெட்ரோல் விலை லிட்டருக்கு ஐம்பதாக உயர்கிறது. பெட்ரோல் விலையில் 4 சதவீதம் இறக்குமதி வரி, 33 சதவீதம் சுங்க வரி, 17 சதவீதம் விற்பனை வரி. இதே போல் டீசலுக்காக மக்கள் தரும் விலையில் 34 சதவீதம் வரியாகவே வாங்கப்படுகிறது. இதில் விற்பனை வரி ன்பது மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடும் என்பதால் ஆங் கே சின்னச் சின்ன வித்தியாசங்கள் இருக்கின்றன. டீசல் ம் பெட்ரோல்க்கு விதித்த வரிகள் மூலம் மட்டும் மத் அரசுக்கு கடந்த ஆண்டு கிடைத்த வருமானம் 84 ஆயிரத்து 900 கோடி ரூபாய். உண்மையைச் சொல்லப் போனால் ஒவ்வொரு பெட்ரோல் பங்கிலும் லிட்டர் லிட்டராய் பெட்ரோலும் டீசலும் போடும் பலரது பணத்தை வைத்துத்தான் மத்திய அரசு பட்ஜெட் போட முடிகிறது. சரி மத்திய அரசில் பங்கு பெற்றுள்ள இடதுசாரிகளும், எதிர்கட்சிகளும் என்ன சொல்கிறார்கள்? மக்களின்

CODE No: 0807150 (தொடர்ச்சி 3ஆம் அட்டையில்)

ஜியே பப்ளிகேஷனுக்காக ஜியே பப்ளிகேஷனில் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 332, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5. ஆசிரியர்: ஜி. அசோகன். தொலைபேசி: 28544294

( கடைசிப் பக்கத் தொடர்ச்சி)

கெட்டில் கைவைத்து கோடிக்கணக்கில் வருவாய் ரும் போது மத்திய அரசு பெட்ரோலிய நி னங்களுக்கு ஏன் மானியம் தர வேண்டும்? வரியும் இ லை மானியமும் இல்லை என்னும் நிலை வந்தாலே பெட்ரோலின் விலை கணிசமாய் குறைந்து விடும் என்கிறார்கள். பொருளாதார நிபுணர்கள் இன்னொரு வழியையும் சொல்கிறார்கள். அதாவது புதிய எண்ணெய் வயல் கொள்கைப்படி ரிலையன்ஸ் எஸ்ஸார், கெயின்ஸ் போன்ற நிறுவனங்கள் எண்ணெய் வயல்களை ஏலத்தில் பெற்ற போது உலக மார்க்கெட்டில் ஒரு பேரல் கச்சா எண்ணெய் விலை 25 முதல் 30 அமெரிக்க டாலராக இருந்த இப்போது சர்வதேச விலை 100 டாலரைத் தாண்டி விட்ட இந்த உள்நாட்டு நிறுவனங்களும், சர்வதேச வி லக்கே பெட்ரோலியப் பொருட்களை இங்கே விற்பனை செய்கின்றன. உலக அளவில் விலை ஏறும் போது பொதுத்துறை நிறுவனங்கள் அதிக நஷ்டத்தை சந்திக்க, இந்த தனியார் நிறுவனங்களின் லாபம் உச்சத்துக்குப் போகிறது. இறக்குமதி உள்ளிட்ட எந்த சிரமமும் செலவும் இல்லாமல் கொள்ளை லாபம் பார்க்கும் இந்த நிறுவனங்களின் லாபத்தில் ஒரு பகுதியை சிறப்பு வரியாக அரசு வசூல் செய்து பொதுத்துறை நிறுவனங்களுக்கு உதவி செய்யலாம்.

இப்படி எத்தனையோ வழிகள் இருந்தாலும் மத்திய அரசு னோ வைகளை நடைமுறைக்குக் கொண்டு வராமல் விழி கி பார்த்துக் கொண்டு இருக்கிறது.

... வாசகர்களே!

நாட்டைப் பற்றி கவலைப்பட ஆரம்பித்தால் பக்கம் கமாய் சொல்லிக் கொண்டே போகலாம். ஸோ... தோடு நிறுத்திக் கொண்டு க்ரைம் நாவல் ஸ்பெஷலைப் படிக்க ஆரம்பியுங்கள். இரண்டுமே துடிப்பான நாவல்கள்.

அடுத்த க்ரைம் நாவல் ஸ்பெஷலிலும் இரண்டு நாவல்கள் இடம்பெற்று உங்களை மகிழ்விக்கப் கின்றன. நடுவில் ஒரு மாதம்தானே! காத்திருங்கள்.

மீண்டும் என் வணக்கம்.

அடுத்த ஃபேக்ஸில் சந்திப்போம்.

*மிக்க அன்புடன்,*

**ராஜேஷ்குமார்.**

# விளக்கம் ப்ளீஸ் விவேக்!

● செல்போன் கோபுரங்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சு மனிதர்களின் உடல் நலத்தைப் பாதிக்கும் என்று சொல்லப்படுவது உண்மையா?

(மா.சிவசக்தி, ஜெயம்கொண்டான்.)

○ உண்மைதான்! பத்து வருடங்களுக்கு முன்னால் நம் வீட்டு மரங்களிலும் வாசல்களிலும் பெருமளவில் காணப்பட்ட சிட்டுக்குருவிகள் இப்போது அறவே இல்லை. இதற்குக் காரணம் செல்போன் கோபுரங்களில் இருந்து வெளிப்பட்ட கதிர்வீச்சுதான் என்று கண்டறியப்பட்டுள்ளது. கதிர்வீச்சின் தாக்கத்தை அந்தச் சிறு பறவைகள் தாங்கிக் கொள்ள இயலாமல் நகர்ப்பகுதிகளை விட்டுசெல்போன் கோபுரங்கள் இல்லாத காட்டுப் பகுதிக்குச் சென்று விட்டதே காரணம். இந்த கோபுரங்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சு இன்னமும் அதிகரிக்கும் போது சற்றுப் பெரிய பறவைகளான காகம், குயில், பருந்து, மயில் போன்ற பறவைகளும் நம் பார்வையில் படுவது அரிதாகிவிடும்.

தற்போது நாடு முழுவதும் செல்போன்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இது எதிர்காலத்தில் இன்னமும் அதிகரிக்கக்கூடும். அதற்கு ஏற்றவாறு பல்வேறு நிறுவனங்கள் சார்பாக ஆங்காங்கே செல்போன் கோபுரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இத்தகைய கோபுரங்கள் மற்றும் செல்போன்களிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சுகளில் உடல் நலத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது. அந்த கதிர்வீச்சின் பெயர் நான் - அயோனைசிங் என்பதாகும். இந்த நான்-அயோனைசிங் கதிர்வீச்சு 200 மெகா ஹெர்ட்ஸில் இருந்து 4000 மெகா ஹெர்ட்ஸ் வரை இருந்தால் மூளைக்கட்டி, உறக்கமின்மை, காது கேளாமை, ஞாபகமறதி போன்றவை உண்டாகும்.

**போனஸ் நியூஸ்:** டெல்லியில் மட்டும் 4ஆயிரத்து 500 செல்போன் கோபுரங்கள் உள்ளன. செல்போன் கோபுரங்களிலிருந்து 500 மீட்டர் சுற்றளவுக்குள் வசிக்கும் மக்களுக்கு மூளைக்கட்டி ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால் செல்போன் கோபுரங்கள் அமைக்கும் போதே அவற்றின் கதிர்வீச்சுக்களை கட்டுப்படுத்த அதற்கு எதிரான கருவிகளை பி.டி.எஸ்.சென்டர்களில் பொருத்த வேண்டும் என்று அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

● புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ஏழு உலக அதிசயங்களில் ஒன்று 'மாச்சு பிச்சு' என்று அறிவிக்கப்பட்டுள்ளதே...? அது என்ன 'மாச்சு பிச்சு...?'

(வெ.சீதாபதி, வேதாரண்யம்.)

○ ஆண்டீஸ் மலை மற்றும் அதன் அடிவாரப் பகுதியில் முற்காலத்தில் கட்டப்பட்டு கைவிடப்பட்ட நகரம்தான் இந்த மாச்சு - பிச்சு. 'மாச்சு - பிச்சு' என்றால் பழைய மலைச்சிகரம் என்று அர்த்தம். இந்த நகரை நிர்மாணித்த மன்னரின் பெயர் பச்சாக் யூட்டெக். இவர் இன்கா பேரரசர். கடல் மட்டத்திலிருந்து 2 ஆயிரத்து 400 மீட்டர் உயரத்தில் மேகங்கள் தவழும் இடத்தில் அமைந்துள்ள 'மாச்சு பிச்சு' நகரம் இன்காவின் இழக்கப்பட்ட நகரம் என்று அழைக்கப்படுகிறது. கி.பி.1450 ஆம் ஆண்டில் பளபளப்பான பெரிய பாறைகளைக் கொண்டு எழுப்பப்பட்ட நகரம் ஸ்பானியர்களின் படையெடுப்பு காரணமாய் கைவிடப்பட்டது.

**போனஸ் நியூஸ்:** பல நூற்றாண்டுகளாக வெளியுலகம் அறியாது இருந்த 'மாச்சு - பிச்சு'வின் பெருமையை அனைவரும் அறியச் செய்தவர் 'ஹிராம் பிங்காம்' என்ற அமெரிக்க வரலாற்று ஆசிரியர். 1911-ம் ஆண்டு இந்த் நகரை உலகின் பார்வைக்குக் கொண்டு வந்தார். 1983-ம் ஆண்டு யுனெஸ்கோ இதை உலகப் பாரம்பரியச் சின்னமாய் ஏற்றுக் கொண்டது.

● **கிரேக்க ஞானி சாக்ரட்டீஸ் விஷம் கொடுத்து சாகடிக்கப்பட்டார் என்பது தெரியும். அது எதற்காக என்பது தெரியாது. அதைக் கொஞ்சம் விளக்க முடியுமா...?**

**(வீ.செங்குட்டுவன், ஈரோடு-1.)**

○ சாக்ரட்டீஸ் ஏதென்ஸ் நகரத்தில் கி.மு.470-ல் பிறந்தவர். முதலில் இவர் ராணுவத்தில் இருந்தார். அதன் பிறகு சமுதாயப் பணியில் ஈடுபட்டு - மனம் போன போக்கில் திரிந்த இளைஞர்களை நல்வழிக்குக் கொண்டுவர முயற்சி செய்தார். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த சாக்ரட்டீஸ் எழுதப் படிக்கத் தெரியாதவர். ஆனால் பேச்சுவன்மை மிக்கவர். அவருடைய பேச்சு இளைஞர்களைக் காந்தம்போல் ஈர்த்தது. இதனால் சாக்ரட்டீஸின் புகழ் கிரேக்கம் முழுவதும் பரவியது. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறாமை குணம் கொண்ட மற்ற தத்துவ ஞானிகளான அனிட்டஸ், மெலிட்டஸ், லைகோன் மூன்று பேரும் சேர்ந்து 'சாக்ரட்டீஸ் இளைஞர்களைக் கெடுக்கிறார்' என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி வழக்கு தொடர்ந்தனர். சாக்ரட்டீஸுக்கு அப்போது வயது எழுபது. இந்த வழக்கை அப்போது இருந்த கிரேக்க அரசு தங்களுக்கு சாதகமாய் எடுத்துக் கொண்டது. காரணம் சாக்ரட்டீஸின் பேச்சால் இளைஞர்கள் புதுவேகம் பெற்று புரட்சியில் ஈடுபடலாம் என்று பயந்து போயிருந்தனர். சாக்ரட்டீஸ் குற்றவாளிக்



கூண்டில் ஏற்றப்பட்டார். சாக்ரட்டீஸ குற்றவாளிதான் என்று தீர்ப்பு கூறப்பட்டது. நீதிபதிகள் இரண்டு வகை தீர்ப்புகளைக் கூறினார்கள். ஒன்று மன்னிப்பு கேட்பது. இரண்டாவது நாடு கடத்துவது. சாக்ரட்டீஸ் இந்த இரண்டு தீர்ப்புகளையும் எதிர்த்து வாதம் செய்தார். கடுமையான விவாதங்கள் நடைபெற்றன. இதனால் கோபம் அடைந்த நீதிபதிகள் சாக்ரட்டீஸுக்கு மரண தண்டனையை அறிவித்தனர். 'விஷம் கொடுத்து கொல்லப்பட வேண்டும்' என்று தீர்ப்பு வழங்கினர். இவரை தண்டனையிலிருந்து தப்ப வைக்க நண்பர் கிரீட்டோ முயன்றார். ஆனால் சாக்ரட்டீஸ் அதை விரும்பவில்லை. தன் இறுதி நாளில் தன் சீடர்களோடு பேசியபடி ஒரு கோப்பையில் ஊற்றித் தரப்பட்ட கடுமையான விஷத்தை வாங்கி அருந்தி உயிர் துறந்தார்.

**போனஸ் நியூஸ்:** சாக்ரட்டீஸ் மறைந்து போனாலும் அவர்க்குப் பின்னால் அவருடைய சீடர் பிளாட்டோ சாக்ரட்டீஸின் தத்துவங்களையும் போதனைகளையும் உலகம் முழுவதும் அறிய வைத்து இளைஞர்களை நல்வழிப்படுத்தினார்.

● **ஹாரிபாட்டர் கதைகளை எழுதியது பெண் எழுத்தாளரா... இல்லை ஆண் எழுத்தாளரா...?**

**(பா.ரேவதி பாண்டியன், விருதுநகர்.)**

○ பெண் எழுத்தாளர்தான்! அவர் பெயர் ஜே.கே.ரவுலிங். இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். மற்ற எழுத்தாளர்கள் பெரியவர்களுக்காக நாவல் எழுதிக் கொண்டிருந்தபோது ஜே.கே.ரவுலிங் மட்டும் சிறுவர்களுக்காக மந்திரஜாலங்கள் நிறைந்த நாவல்களை எழுதினார். அவை 'ஹாரிபாட்டர்' என்ற பெயரில் வெளிவந்து உலகம் முழுவதும் உள்ள சிறுவர்களைக் கவர்ந்தன. இதுவரைக்கும் 40 கோடி பிரதிகள் விற்றுள்ளன. இதனால் இவரிடம் பணம் கோடி கோடியாய்க் குவிந்தது. 42 வயதான ஜே.கே.ரவுலிங்

இப்போது உலகில் உள்ள கோடீஸ்வரிகளில் ஒருவர்.

**போனஸ் நியூஸ்:** இன்றைக்கு கோடீஸ்வரியாக உள்ள ஜே.கே.ரவுலிங் ஆரம்ப காலத்தில் கஷ்டப்பட்டவர். கணவர் ஜார்ஜ் அரண்டேஸுடன் ஏற்பட்ட மனவேற்றுமை காரணமாகப் பிரிந்து வாழ்ந்தவர். ஒரு கைக்குழந்தையை வைத்துக் கொண்டு வாழ்க்கையோடு போராடிய இவர் ஒருமுறை தற்கொலைக்கு முயன்றார். பிறகு உளவியல் நிபுணரிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டு ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்து எழுத்தாளராகி எழுத்துலகில் சாதனை செய்தார்.

● **வானிலை அறிவிப்பு செய்பவர்கள் எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு 'இன்று மழை வரும்'; 'மழை வராது' என்று சொல்கிறார்கள்?**

**(சி.த.மெய்யப்பன், புளியார்.)**

○ ஆஸ்திரேலியா நாட்டில் 'RAIN MAN' அதாவது 'மழை மனிதன்' என்ற கம்ப்யூட்டர் கட்டமைப்பு ஒன்று உள்ளது. இந்த கட்டமைப்பின் வேலை: பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை ஒட்டி உள்ள கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்ப நிலை மற்றும் தென் மண்டலக் காற்றழுத்தக் குறியீடு ஆகியவற்றை உபயோகித்து உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும் வானிலை அறிக்கைகளைத் தயார் செய்து அனுப்பி வைப்பது. இந்த வானிலை அறிக்கையை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் நம் நாட்டில் வானிலை அறிக்கைகள் தயார் செய்யப்படுகின்றன.

**போனஸ் நியூஸ்:** பெரும்பாலான வானிலை அறிக்கைகள் பொய்யாய்ப் போய்விடுவதற்குக் காரணம் திடீரென்று தட்பவெப்ப நிலையில் ஏற்படும் மாற்றம்தான். இரண்டு மாதங்களுக்கு முன்னால் சென்னையைத் தாக்கியிருக்க வேண்டிய நர்கிஸ் புயல் மியான்மர் நாட்டை நோக்கிப் போனதற்குக் காரணம் தட்பவெப்ப



நிலையும், அடித்த காற்றும்தான்.

● **மின்னல் மின்னும் போது அவை நேர்க்கோடாக இல்லாமல் கோணலாய் இருப்பது ஏன்...?**

**(பா.தென்னவன், திருச்சி.)**

○ மழை பெய்யும் போது வானத்தில் உள்ள மேகங்கள் தன்னிடம் உள்ள தூசி, நீர்த்திவலைகளால் மின்னேற்றம் அடைகின்றது. இவ்வாறு மின்னேற்றம் அடையும் இரண்டு மேகங்களுக்கு இடையேயும், மேகத்தில் இருந்து பூமிக்கும் மின்சாரம் பாய்ந்து மேகங்களின் மின்னேற்றத்தைக் குறைக்கிறது. காற்றைக் கிழித்துக் கொண்டு இவ்வாறு பாயும் மின்சாரத்தால் ஒளியும் ஒலியும் உண்டாகின்றன. இவற்றையே நாம் மின்னல், இடி என்கிறோம். மேகங்களில் இருந்து மின்சாரம் பாயும் போது குறைவான மின் தடையுள்ள பாதையில்தான் செல்லும். நீர்த்திவலைகள் அதிகம் உள்ள பகுதி தூசிகள் மின்சாரத்தை எளிதில் கடத்தும். மின்னல் மின்னும் போது வீசும் காற்றின் வேகம் அதிகமாக இருந்தால் மின்வெட்டு நேர்கோடாக அமையாமல் கோணல்மாணலாகத்தான் இருக்கும்.

**இந்த பகுதிக்குக் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**விளக்கம் ப்ளீஸ் விவேக்,**
**க்ரைம் நாவல் ஸ்பெஷல்,**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை-5.

# ஒரு நிமிஷ நிசப்தம்



## ராஜேஷ்குமார்

## 1

டைனிங் டேபிளுக்கு முன்புறமாய் உட்கார்ந்தபடி, பீங்கான் கோப்பையில் இருந்த உப்பில்லாத கோதுமைக் கஞ்சியை, மருந்து சாப்பிடுகிற உணர்வோடு ஸ்பூன் ஸ்பூனாய் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார் சந்தான கிருஷ்ணன்.

அவருக்கு எதிரே உட்கார்ந்திருந்த அவர் மகள் அபிநயா சப்பாத்தியைப் பிய்த்து காரமான குருமாவில் தோய்த்து, கடைவாயில் அதக்கி சுவாரசியமாய் மென்று கொண்டிருக்க, சந்தான கிருஷ்ணன் சொன்னார்.

''சொர்க்கம் நரகம்ங்றது இதுதாம்மா... செத்த பின்னாடி யாரும் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போறதில்லை. உயிரோடு இருக்கறப்பவே ஜனங்கள் சொர்க்கத்தோட சுகத்தையும், நரகத்தோட வேதனையையும் அனுபவிச்சுடறாங்க...''

''எப்படியப்பா சொல்றீங்க?''

''உன்னையும் என்னையுமே எடுத்துக்கோம்மா அபிநயா! உப்பும் உறைப்பும் காரமுமா நீ சாப்பிட்றே... நான் ஒரு உப்புக்கல்லைக்கூட சேர்த்துக்க முடியாம இந்த சவசவா கோதுமைக் கஞ்சியைக் குடிச்சுட்டிருக்கேன். சொந்து பத்தைச் சேர்த்தும் ஒரு வாய் சோத்தை ஒழுங்கா தின்ன முடியல்லேம்மா... இதுதான் ஒருத்தனுக்கு நரகம்...''

அபிநயா சப்பாத்தி விள்ளலை அடக்கிய வாயோடு சிரித்தாள். ''அப்பா! இந்த டயட் கண்ட்ரோல் கொஞ்ச நாளைக்குத்தானே...? உடம்பு சால்ட் குறைஞ்சு நார்மலுக்கு வந்ததும் நீங்களும் வாய்க்கு ருசியா சாப்பிடலாம்னு நம்ம டாக்டர் சொல்லியிருக்காரப்பா... கஷ்டப்பட்டு ரெண்டு மாசம் எப்படியாவது பொழுதை ஓட்டுங்க...''

சந்தான கிருஷ்ணன் ஒரு குழந்தை மாதிரி சிணுங்கினார். ''ரெண்டு மாசம் வரைக்கும் என்னால இந்த நாக்கை வெச்சுகிட்டு இருக்க முடியாதம்மா.''

அவரையே கவலையோடு பார்த்தாள் அபிநயா.

கிட்டத்தட்ட என்பது லட்ச ரூபாயை சேர்த்து வைத்திருக்கிற அப்பாவுக்கு இரண்டு இட்லியைக் கூட வாய்க்கு ருசியாய் சாப்பிட முடியாத துர்பாக்கியம் ஏற்பட்டு விட்டதற்காகத் தன்னு டைய இருதயத்தின் ஓரம் லேசாய் கசிந்தாள்.

சந்தான கிருஷ்ணன் ஏற்கெனவே டயாபடீஸ் காரர்.

இனிப்பை மறந்து வெகு காலமாயிற்று.

கடந்த ஆறுமாசமாய் ரத்தத்தில் சால்ட். கூடவே ப்ளட் பிரஷர். குடும்ப டாக்டர் மேனன் பிரிஸ்க்ரிப்ஷன் எழுதிக் கொடுத்தார்.

காலையில் உப்பில்லாத கோதுமைக்கஞ்சி இரண்டு கோப்பை. மத்தியானம் உப்பும் எண்ணெயும் கலக்காத சுட்ட சப்பாத்தி. உப்பில்லாமல் வேகவைத்த ஏதாவது ஒரு காய்கறி. ராத்திரி கோதுமைக்கஞ்சி.

''அம்மா... அபிநயா...!'' - சந்தான கிருஷ்ணன் கோதுமைக்கஞ்சி இருந்த பீங்கான் கோப்பையைத் தள்ளி வைத்துவிட்டுக் கூப்பிட்டார்.

''என்னப்பா...?''

''உன்னோட சப்பாத்தியில கொஞ்சம் போல பிச்சு - அந்த குருமாவில தோய்ச்சு குடம்மா... சாப்பிடணும் போலிருக்கு...''

அபிநயா தட்டைத் தூக்கிக் கொண்டு எழுந்தாள்.

''நோ... நோ... டாக்டர்க்கு தெரிஞ்சா என்னை சத்தம் போடுவாரப்பா... இனிமே உங்க முன்னாடி உட்கார்ந்து சாப்பிடறது மகா தப்பு... கிச்சனுக்கே போயிடறதுதான் பெட்டர்...''

''அபிநயா... ப்ளீஸ்...''

''ஸாரி... மைடியர் டாடி...''

''புது மோஸ்தர்ல ஒரு நெக்லஸ் வந்திருக்காம் கீர்த்தி லால் நேத்தைச் சாயந்தரம் போன் பண்ணி சொன்னார்... சாயந்தரம் ரெண்டு பேரும் ஷாப்பிங் போலாம்... அந்த நெக்லஸை உனக்கு வாங்கி தர்றேன்...''

''நோ... டாடி... இந்த இந்திய நாட் ஜனாதிபதியே கோலார் தங்கச் சுரங்கத்தை



எம்பேர்க்கு எழுதி வெச்சாலும் சரி... இந்த சப்பாத்தி விள்ளலை குருமாவுல தோய்க்க தரமாட்டேன். கண்ணை மூடிட்டு கஞ்சியை குடிச்சுடுங்க பார்க்கலாம்.''

''என்னால முடியலையம்மா... குமட்டுது...''

''நீங்க வாந்தி பண்ணினாலும் பரவாயில்லை... குடிச்சுதான் ஆகணும்... இப்போ நீங்க குடிக்கலைன்னா டாக்டர் மேனனுக்கு போன் பண்ணி நீங்க சப்பாத்தியும் குருமாவும் கேட்டதைச் சொல்லிடுவேன்...''

''சொல்லிடாதேம்மா... மேனன் இஞ்செக்ஷனைத் தூக்கிகிட்டு வந்துடுவார்... அந்த வலியைத் தாங்கிக்க முடியாது. சப்பாத்தி குருமாவை நீயே சாப்பிடு... நான் இந்த கஞ்சியையே குடிச்சுடறேன்...'' - சந்தான கிருஷ்ணன் தீவிரமாய் சாப்பிட ஆரம்பித்தார்.

அபிநயா சிரித்துக்கொண்டே ஏதோ சொல்ல முயன்ற போது வாசலில் காலிங்பெல் 'கிண் கிணார்' என்றது.

''மணி! அது யார்ன்னு போய் பாரு'' - சந்தான கிருஷ்ணன் தலையைத் திருப்பி உள்ளே பார்த்துச் சொல்ல, சமையல் மணி தோளில் போட்ட துண்டோடு வாசலை நோக்கிப் போனான்.

ஒரு நிமிஷம் கழித்து வந்தான்.

''யாரு மணி?''

''புரோக்கர் அய்யா வந்திருக்காருங்க...''

''சிவகுருநாதனா..?''

''ஆமாங்க...''

''உள்ளே வரச்சொல்லு...''

''என்னப்பா.... இங்கேயேவா...?'' - அபிநயா கொஞ்சம் திகைப்போடு கேட்க, சந்தான கிருஷ்ணன் புன்னகைத்தார். ''அந்த சிவகுருநாதனுக்கு தனியா நேரத்தை ஒதுக்கிப் பேச முடியாதம்மா... சாப்பிடறப்பவே பேசி அனுப்பிச்சுடலாம்... மனுஷன் பேச ஆரம்பிச்சா ஓய மாட்டார்...''

''அவர் இப்ப எதுக்காக வந்திருக்கார்?''

''உன்னோட கல்யாண விஷயமா ஏதாவது வரன் கொண்டு வந்திருப்பார்... பத்து நாளைக்கு

முன்னாடிதான் அவர்கிட்ட சொன்னேன் - நல்ல வரனா இருந்தா பார்க்கச் சொல்லி...''

அபிநயாவின் அழகான முகம் மாறியது.

''என்னோட கல்யாணத்துக்கு இப்போ என்னப்பா அவசரம்...?''

சந்தான கிருஷ்ணன் சிரித்தார்.

''தமிழ் நாட்ல பொறந்த ஒவ்வொரு பொண்ணும் கல்யாணத்துக்கு முன்னாடி சொல்ற வார்த்தை இது. இன்னும் ரெண்டு மாசம் போனா உன்னோட இருபதாவது வயது வருதும்மா... உங்கம்மா உயிரோடு இருந்திருந்தா இந்நேரம் உனக்கு கல்யாணமாகி ஒரு வருஷம் முடிஞ்சிருக்கும்...''

''அப்பா...''

''ம்''

''நான் இப்பத்தான் படிப்பை முடிச்சுட்டு ஆறுமாசமா ஃப்ரீயா இருக்கேன். இந்த லைஃப் எனக்குப் பிடிச்சிருக்கு... ஒரு வருஷம் இப்படியே இருக்கேனே...?''

''நோ... நோ... நல்ல வரனா வந்தா கல்யாணத்தை பண்ணிகிட்டு புருஷன் கூட ஃப்ரீயா இரேம்மா!''

சந்தானகிருஷ்ணன் சொல்லிக்கொண்டிருக்கு போதே புரோக்கர் சிவகுருநாதன் ஒரு கல்யாண புரோக்கருக்குரிய சகல லட்சணங்களோடு வந்தார்.

''நமஸ்காரம்...''

''என்னய்யா... இந்நேரத்துக்கே வந்துட்டீர்...?

சிவகுருநாதன் இளித்தார். ''நேத்தைக்கு நவமி நல்ல விஷயத்தை நவமியில பேசக்கூட தும்பாங்க...''

''உட்காருமய்யா! டிபன் சாப்ட்றீரா...?''

''வேண்டாம்... வர்ற வழியிலதா அன்னபூர்ணாவில நுழைஞ்சு டிபன முடிச்சுகிட்டு வர்றேன். வேணுமின்னா ஒரு வா காபி சாப்பிடறேன்...''

அபிநயா தட்டை நகர்த்திவிட்டு எழுந்தாள்.

சந்தானகிருஷ்ணன் ஏறிட்டார். ''என்னம் எந்திரிச்சுட்டே... ரெண்டு சப்பாத்திதா



சாப்புட்டே?''

''போதும்பா... வயிறு ரொம்பிடுச்சு''

அபிநயா சொல்லிக்கொண்டே வாஷ்பேசினை நோக்கி நடந்தாள். சந்தானகிருஷ்ணன் போகிற மகளையே ஒரு நிமிஷம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு புரோக்கரிடம் திரும்பினர்.

''ம். நீர் சொல்லுமய்யா, வந்த விஷயத்தை.''

''ஒண்ணுமில்லை. நீங்க உங்க பொண்ணுக்கு வரன் பார்க்கச் சொன்ன நேரம் பேஷான நேரமா இருந்திருக்கணும். ஒரு அருமையான வரன் வாய்ச்சிருக்கு.''

''மாப்பிள்ளைக்கு இதே ஊரா...?''

''மெட்ராஸ்...''

''குடும்பம் எப்படி?''

''சாதாரணமான குடும்பம். பையனோட அப்பா ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியாவில ஆபீஸராய் இருந்து ரிடையரானவர். பேரு துளசிங்கம்.''

''பையன் என்ன பண்றான்...?''

''பையன் பி.ஈ. எலக்ட்ரானிக்ஸ் படிச்சுட்டு கோச் பாக்டரியில் வேலைக்கு இருக்கான். மூவாயிரம் ரூபா சம்பளம் வாங்குறான். ஒரே பையன். கூடப் பொறந்தவங்க யாருமில்லை. அம்மாக்காரி அஞ்சு வருஷத்துக்கு முன்னாடியே செத்துப் போயிட்டா...''

''சொத்து என்ன தேறும்?''

''உங்க கூட ஒப்பிட்டு பார்க்கிறப்போ அவங்க ஒண்ணுமில்லைதான். கிராமத்துல ஏதோ நிலம் நீச்சு இருக்கு''

''அந்த நிலம் நீச்சு எவ்வளவு தேறும்?''

''பெரிய ரூபாய் ஒரு ரூபாய்க்கு தேறும்?''

''அதாவது... ஒரு லட்சம்?''

''ஆமாங்க.''

''சிவகுருநாதன்!''

''சொல்லுங்க.''

''என்னோட சொத்து மதிப்பு எவ்வளவுன்னு உமக்கு தெரியுமா?''

''சரியா... தெரியல்லீங்க.''

''தெரியாட்டி கேட்டு தெரிஞ்சுக்க. இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி எண்பது லட்சம் தேறும்.

எனக்கு வரப்போற மாப்பிள்ளை எனக்கு சமமா இருக்கணும்னு நான் சொல்லலை. எனக்கிருக்கிற சொத்து மதிப்புல பத்துல ஒரு பங்காவது இருக்கணும்னு நான் எதிர்பார்க்கிறேன்.''

''அப்போ இந்த சம்பந்தம் வேண்டாங்களா?''

''வேண்டாம்.''

''பையனைப் பார்த்தா நீங்க வேண்டாம்னு சொல்ல மாட்டீங்க. செட்டு வீட்டு புள்ளை மாதிரி செவச்செவேன்னு இருக்கான். நல்ல உத்யோகம். பிரச்னையில்லாத குடும்பம்.''

''இதெல்லாம் சரிதான் சிவகுருநாதன். ஆனா நான் நினைக்கிற சொத்து மதிப்பு இல்லையே? மத்ததுல கொஞ்சம் முன்ன பின்ன இருந்தாலும் சொத்து மதிப்பு பத்துலட்சம் கண்டிப்பா இருக்கணும். நீர் வரன் தேட போறப்ப இந்த குவாலிபிகேஷன் மொதல்ல இருக்கான்னு பார்த்துடும்.''

சிவகுருநாதன் ஏமாற்றத்தோடு எழுந்தார்.

''இந்த சம்பந்தத்தை பேசி முடிச்சடலாம்னு வந்தேன். ஆனா உங்க எண்ணம் வேறுவிதமா இருக்கு. ஆகட்டும்... நீங்க சொல்றபடி வே பார்த்துடறேன்.''

''அதுக்காக படிக்காத பையனா பார்த்துட தேயும். பொண்ணு பி.எஸ்.ஸி படிச்சிருக்கு படிப்பு ஒரு படி அதிகமா இருக்கணும் கௌரவமான குடும்பமா இருக்கணும்.''

''ம்.. பார்த்துடறேன்....''

மணி கொண்டு வந்த வைத்து காப்பிை டபராவில் ஆற்றி சூட்டைக் குறைத்து வான அண்ணாந்து வயிற்றில் வார்த்துக் கொண் புரோக்கர் புறப்பட்டார்.

சந்தானகிருஷ்ணன் 'நாப்-கின்'னால் வா ஒற்றிக் கொண்டு தன் அறையை நோக்கி நடக் முயல, அபிநயா பின்புறமிருந்து கு கொடுத்தாள்.

''அப்பா!''

''என்னம்மா?'' என்றார்.

''நிஜமாவே எனக்கு கல்யாணம் பண்ண போறதா முடிவு பண்ணிட்டீங்களா?''



''அதிலென்னம்மா பொய் வேண்டிக் கிடக்கு? நிஜமாத்தான் ஸ்டெப்ஸ் எடுத்துட்டிருக்கேன். ஒரே மாசம்! கல்யாணம் செட்டிலாயிடும்...''

''புரோக்கர்கிட்டே என்னமோ நிபந்தனை போட்டிருந்தீங்களேப்பா? அது உங்க மனசுக்கு சரியா படுதாப்பா?''

''அந்த சொத்து மதிப்பு பத்து லட்சத்தை சொல்றியாம்மா?''

''ம்...''

''அது என்னோட பிரஸ்டீஜ் இஷ்யூ சம்பந்தப்பட்ட விஷயம் அபிநயா! எனக்கு சம்பந்தியா வரப் போறவங்களைப்பத்தி யாரும் எதும் பேசிடக்கூடாது. நான் கொண்டு வந்திருக்கிற மாப்பிள்ளையும் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்தான்னு மத்தவங்க சொல்லணும்...''

அபிநயா எதும் பேசத் தோன்றாமல் எங்கோ பார்த்துக் கொண்டு நின்றாள். கண்களில் தீவிரமான சிந்தனை.

''என்னம்மா யோசனை பண்றே?''

''நீங்க சொல்ற நிபந்தனை எம்மனசுக்கு சரியா படலைப்பா...''

சந்தானகிருஷ்ணன் சிரித்தார்.

''இதோ பாரம்மா அபிநயா! வர்ற மாப்பிள்ளையைப் பார்த்து உனக்குப் பிடிச்சிருக்கா இல்லையான்னு சொல்றது தான் உன்னோட வேலை. மத்த விஷயங்களை நீ கண்டுக்காதே.''

மனசுக்குள் ஒரு பிரளயம் சுழன்றது.

'சபரி! உங்களை அப்பா எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறார்?

ஒரு தனியார் கம்பெனியில் -

மாதம் ஆயிரம் ரூபாய் வாடகை வீட்டில் நோயான அம்மாவோடு நாட்களைத் தள்ளும் உங்களை அப்பா தன் மாப்பிள்ளையாக எப்படி அங்கீகரிக்கப்போகிறார்...?'

அபிநயா சேலைத்தலைப்பால் வியர்வையை ஒற்றிக் கொண்டு சோபாவில் ஆயாசமாய் சாய்ந்தாள். அடிவயிற்றில் சின்னதாய் ஒரு பயம் எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தது.

## 2

சபரி கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தான்.

சுருள் சுருளான அடர்த்தியான கிராப், சீப்பின் பற்களுக்கு சிக்காமல் சுருண்டன. சபரியின் ஹேண்ட்சம்முக்கும் பர்சனாலிடிக்கும் இந்த சுருள் கிராப் ஒரு பிரதானமான அம்சம். கோதுமை நிறம். பெண்மைத்தனமான கண்கள். புன்னகைக்க ஆரம்பித்து உதடுகளை லேசாக விரித்தாலோ, உதட்டை இறுக மூடினாலோ கன்னத்தில் விழுகிற குழி எந்தப் பெண்ணின் மனசையும் லேசாய் சுண்டும்.

''டேய்... சபரீ...ஈ...ஈ...ஈ''

அம்மாக்காரி குரல் கொடுத்தாள் சமையலறையிலிருந்து.

''இதோ வந்துட்டேம்மா...''

''தட்டுல இட்லி எடுத்து வெக்கச் சொல்லிட்டு அங்கே என்னடா பண்ணிட்டிருக்கே...? சீக்கிரம் வாடா!''

''வந்துட்டேன்... வந்துட்டேன்...''

சீப்பை கண்ணாடியின் இடுக்கில் சொருகிவிட்டு, தேங்காய்ப்பூ துவாலையை தோளில் போர்த்திக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தான்.

அம்மாக்காரி தன் மெலிந்த கையால் ஓலைத் தடுக்கை எடுத்துப் போட - உட்கார்ந்தான்.

''இட்லிக்கு தொட்டுக்க • என்னம்மா பண்ணியிருக்கே?''

''வெங்காய சட்னி...''

கிண்ணத்தை நகர்த்தினாள். நிமிஷ நேரத்தில் இரண்டு இட்லிகளை வயிற்றுக்குள் தள்ளிவிட்டு, தண்ணீர் டம்ளரை கையில் எடுத்துக் கொண்டபோது அம்மாக்காரி முனகினாள்.

''சபரி...''

''என்னம்மா...?''

''மளிகை சாமான் பூராவும் ஆயிடுச்சுடா... ஒரு நூறு ரூபா குடுத்துட்டுப் போனா எல்லாத்தையும் வாங்கிப் போட்டுடலாம்...''

சபரி டம்ளரிலிருந்த தண்ணீர் பூராவையும்



முழுமூச்சில் குடித்துவிட்டு காலி டம்ளரை கீழே வைத்தான்.

''என்னம்மா... அதுக்குள்ளே மளிகை சாமான் ஆயிடுச்சா? தேதி இன்னிக்கு என்ன தெரியுமாம்மா...? இருபது.''

''நான் என்னடா பண்ணட்டும்....? போனமாசம் இருந்த விலைவாசிக்கும் இந்த மாச விலைவாசிக்கும் நிறைய வித்தியாசம்... நீ குடுத்த பணம் எப்படிக் காணும்?''

''ஆபீஸ்லதான் அட்வான்ஸ் கேக்கணும்.''

''தருவாங்களா...?''

''ம்... தருவாங்க. அடுத்த மாசம் சம்பளம் தர்றப்போ பிடிச்சுக்குவாங்க. வெங்காய சட்னி ஜோரா இருக்கும்மா... கொஞ்சம் போடேன்''

அம்மாக்காரி எடுத்துப் போட்டாள். இட்லியை இரண்டாய் விண்டு ஒரு துண்டை சட்னியில் தோய்த்து வாயில் திணித்துக் கொண்டே ''அம்மா...'' என்றான்.

''என்னடா...?''

''உனக்கு மாத்திரை இருக்கா...? ஆயிடுச்சுன்னா ஞாபகப்படுத்தம்மா. செலவுக்கு பயந்துட்டு கம்முன்னு இருந்துடாதே...''

''இன்னும் ரெண்டு நாளைக்கு வருண்டா...''

''டானிக்?''

''அரை பாட்டில் அப்படியே இருக்கு...''

அரைடஜன் இட்லிகளை உள்ளே தள்ளி - அம்மா தந்த காப்பியை உறிஞ்சிவிட்டு சட்டை பேண்ட்டுக்குள் நுழைந்து வாசலில் நின்றிருந்த தன் சைக்கிளை ஸ்டாண்டிலிருந்து விடுவித்தபோது பின்பக்கமாய் வீட்டுக்காரரின் குரல் கேட்டது.

''தம்பி!''

சபரி திரும்பினான்.

வீட்டுக்காரர் வாயில் வேப்பங்குச்சியை மென்று கொண்டே சிரித்தார்.

''என்ன தம்பி ஆபீசுக்கு புறப்பட்டுட்டீங்களா?''

''ம்...''

''ரெண்டு நாளா உங்களைப் பாத்து பேசணும்னு நினைச்சேன். ஆனா முடியலை.

நான் படுக்கையை விட்டு எழுந்திரிக்கிற துக்குள்ளே நீங்க ஆபீஸ் போயிடறீங்க...''

''என்ன விஷயம்...?''

''கார்ப்பரேஷன்ல வரியை ஏத்திட்டாங்க...''

''அதனால...?''

''அடுத்த மாசத்திலிருந்து வாடகை அம்பது ரூபா ஜாஸ்தியாகும்...''

சபரி எரிச்சலோடு அவரைப் பார்த்தான்.

''ஆறுமாசத்துக்கு முன்னாடி தான் வாடகையில இருபது ரூபா ஏத்தினீங்க?''

வீட்டுக்காரர் இளித்தார்.

''அது தண்ணி வரி...''

''இந்த வீட்டுக்கு நீங்க கேக்கிற வாடகை அதிகம்''

''அப்படி அதிகம்ன்னு நீங்க நினைச்சா காலி பண்ணிடுங்க தம்பி. ஐயாயிரம் ரூபா அட்வான்ஸ் குடுத்து ஆயிரத்து ஐநூறு ரூபா வாடகைக்கு பார்ட்டி ரெடியா இருக்கு...''

எரிச்சலோடு வீட்டுக்காரரைப் பார்த்தான் சபரி. சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு மெளனமாய் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

''என்ன தம்பி பதில் பேசாம போறீங்க?''

''பேசறதுக்கு என்ன இருக்கு... அடுத்த மாசத்திலிருந்து நீங்க கேட்ட வாடகையைத் தர்றேன். மழை வந்தா ஒழுகற அந்தக் கூரையை மட்டும் ரிப்பேர் பண்ணிக் குடுத்துடுங்க போதும்...''

''அதுக்கென்ன... பண்ணிக் குடுத்துட்டா போச்சு.'' - வீட்டுக்காரர் சொல்லிக் கொண்டே இளிக்க, அந்த இளிப்பை காண சகிக்காமல் சைக்கிளை ஏறி மிதித்தான் சபரி.

ட்ராபிக் தெரியும் தெருமுனைக்கு வந்து ஜாக்கிரதையாய் வளர்ந்து ஹெட்குவார்ட்டர்ஸ் ரோட்டில் திரும்பினான்.

எதிரே அந்த கார் வந்தது.

அபிநயாவின் சிவப்பு நிற ஹெரால்ட்.

''ஹாய் அபி...'' - முகம் ஒரு பிரகாசத்துக்குப் போக அடித்தொண்டையில் சத்தமில்லாமல் கூவி



சைக்கிளை 'சக்'கென்று ப்ரேக் போட்டு நிறுத்தினான்.

அபிநயாவும் ஹெரால்டை ஒதுக்கினாள்.

சைக்கிளை ஸ்டாண்டு போட்டு நிறுத்திவிட்டு அவளருகே ஓடி வந்தான் சபரி. ''பட்டப்பகல்ல நிலாவோட தரிசனம்...''

அவனுடைய கேலியை மதித்து புன்னகைக்காமல் சலனமில்லாத முகபாவத்தோடு சபரியை ஏறிட்டாள் அபிநயா.

''ஆபீஸுக்கு புறப்பட்டுட்டீங்களா?''

''ஆமா...''

''எனக்காக ஒரு அரைநாள் லீவு போட முடியுமா?''

சபரி தன் இரண்டு புருவத்தையும் அரை மில்லிமீட்டர் உயர்த்தினான்.

''லீவு போடணுமா...? எதுக்கு...?''

''உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்...''

''என்ன பேசப்போறே அபி? பேச வேண்டியதை சாயந்தரமா பேசலாமே?''

''எனக்கு இப்பவே பேசணும் போலிருக்கு...''

''என்ன விஷயமாய் அபி...?''

''லீவு போட்டுட்டு என்கூட வாங்க சொல்றேன்...''

''பிடிவாதமே! உனக்கு இன்னொரு பெயர் அபிநயாவா? ஒரு ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணு. இந்த சைக்கிளை நமக்கு தெரிஞ்ச டைலர் கடையில நிறுத்திட்டு வந்துடறேன்.''

''சீக்கிரமா வாங்க.''

அவன் சொன்ன மாதிரியே சீக்கிரமாய் வந்தான் சபரி.

அபிநயா கதவைத் திறந்துவிட, காருக்குள் வந்தான் சபரி. அபிநயா ஸ்ப்ரே பண்ணியிருந்த பிளேசர் செண்ட் குப்பென்று அவன் மூக்குக்கு வந்தது.

காரை கிளப்பினாள்.

''எங்கே போறோம் அபி?''

''யாரோட டிஸ்டர்பன்ஸும் இல்லாமே நாம கொஞ்ச நேரம் பேசணும். ஏதாவது ஒரு இடத்தை நீங்களே சொல்லுங்க சபரி.''

''ஆர்.எஸ். புரத்தில் இருக்கிற ட்ராகன் ரெஸ்டாரெண்ட் போயிடலாமா அபி...? இந்நேரம் போனா ஃப்ரீயா இருக்கும்.''

''கூட்டம் இருக்காதே?''

''ஊ...ஹூ...ம்....''

காரை ஆர்.எஸ். புரம் போகும் மார்க்கத்தில் திருப்பினாள் அபிநயா. அந்நேரத்துக்கே கோவை போக்குவரத்தில் சுறுசுறுப்பு கூடியிருந்தது.

''என்ன விஷயம் அபி?''

''ட்ராகனுக்குப் போய் சொல்றேன்...''

''எனிதிங் சீரியஸ்?''

''ட்ராகனுக்குப் போய் சொல்றேன்...''

சபரி புன்னகைத்து அவளைப் பார்த்தான்.

அபிநயா கட்டியிருந்த பிங்க் நிற சேலைத் தலைப்பு காற்றில் படபடக்க, காதோரம் சுருண்டிருந்த கேசம் ஒன்று காற்றை உபயோகப்படுத்தி-அபிநயாவின் கன்னத்தில் 'S' போட பழகிக் கொண்டிருந்தது. சந்தனத்தால் செய்த மாதிரி நீண்டிருந்த விரல்கள் காரின் ஸ்டீயரிங்கை அலட்சியமாய் கையாண்டு கொண்டிருந்தது.

''விஷயம் என்னவாயிருக்கும்ன்னு நான் சொல்லட்டுமா அபி?''

''ம்...''

''உங்கப்பாவுக்கு நம்ம விவகாரம் தெரிஞ்சு போயிருக்கும்...''

''நோ...''

''உன்னைப் பெண்பார்க்க எவனாவது வரப்போறான்?''

''நோ...''

''ரெண்டும் இல்லேன்னா பின்னே என்னவாம்?''

''ட்ராகன்ல போய் சொல்றேன்''

''சஸ்பென்சே! உன்னுடைய இன்னொரு பெயர் அபிநயாவா?'' - தலையில் கைவைத்து போலியாய் ஆயாசப்பட்ட சபரி மயக்கம் வருகிற மாதிரி பாவனை காட்டினான்.

நிழலான திவான்பகதூர் ரோட்டில் கார் நிதான வேகத்தில் ஓடி ட்ராகனுக்கு எதிரே வந்து நின்றது.



ட்ராகன் ரெஸ்டாரெண்ட் சைனீஷ் பாணியில் ஏராளமான கண்ணாடி ஜன்னல்களோடு இருந்தது. ரெஸ்டாரண்டின் முகப்புக் கதவைத் திறந்து விடுவதற்காக, சலவைக்கு போய்விட்டு வந்த வெள்ளை யூனிபார்மில் வெயிட்டர் ஒருவன் பவ்யமாய் காத்திருந்தான்.

காரை பார்க் செய்து விட்டு உள்ளே போனார்கள் சபரியும் அபிநயாவும்.

ஸ்பீக்கரில் 'போனிஎம்' மெலிதாய் அதிர்ந்து கொண்டிருக்க - சொற்பமான கூட்டம் கட்லெட் முள்கரண்டிகளோடும், கோலா பாட்டில்களோடும் தெரிந்தது.

கண்களை ஒற்றியெடுக்கிற இதமான அரை வெளிச்சம்.

காலியாய் இருந்த நாற்காலிகளில் பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள். வெயிட்டர் ஒருவன் காலியான டம்ளர்களை வைத்து அதில் ஐஸ்வாட்டரை நிரப்பிவிட்டு போக - அபிநயாவை பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான் சபரி.

''இதுதான் ட்ராகன் ரெஸ்டாரெண்ட்... இனிமே நீ விஷயத்தைச் சொல்லலாமே அபி?''

''சபரி...''

''ம்...''

''நம்ம காதலுக்கு ஒரு பிரச்னை முளைச்சிருக்கு...''

''என்ன பிரச்னை...?''

அபிநயா பதில் சொல்லத் தோன்றாமல் சபரியின் முகத்தையே பார்த்தாள். சபரி ஐஸ் வாட்டர் நிரம்பியிருந்த டம்ளரை உள்ளங்கைகளில் வைத்து உருட்டிக் கொண்டே கேட்டான்.

''ஜாதிப் பிரச்னையா...? பணப் பிரச்னையா?''

''பணப்பிரச்னை...''

''விபரமா சொன்னா மேற்கொண்டு பேச வசதியா இருக்கும்...''

''சபரி! நாம ரெண்டு பேரும் காதலிக்க ஆரம்பிச்ச அந்த ஆரம்ப நாள்லேயே நீங்க என்கிட்ட ஒரு சந்தேகத்தை கிளப்பினீங்க. அந்தஸ்தோட உச்சாணிக் கொம்புல இருக்கிற எங்கப்பா நம்ம காதலை ஒத்துக்குவாரான்னு

கேட்டீங்க... அப்போ நான் எங்கப்பாவை பத்தி பெருமையா சொன்னேன். 'எங்கப்பா அந்தஸ்தை பார்க்க மாட்டார். என்னோட ஆசையைத் தான் பார்ப்பார். பணத்தோடு வர்ற மாப்பிள்ளையைக் காட்டிலும், குணத்தோடு வர்ற மாப்பிள்ளையைத் தான் அவருக்குப் பிடிக்கும்'னு சொன்னேன்...''

''ஆமா சொன்னே...! உங்கப்பா இப்ப என்ன சொல்றார்?''

''அவர் நினைக்கிற அந்த குணமான மாப்பிள்ளைக்கும் பத்து லட்ச ரூபாய் சொத்து மதிப்பு இருக்கணுமாம்... இன்னிக்கு சொல்லிட்டார்...''

''விளையாட்டுக்கு சொல்லியிருப்பார்...''

''விளையாட்டில்லே சபரி, சீரியஸாவே சொல்லிட்டார்... அப்பாவோட குணத்தைப்பத்தி எனக்குத் தெரியும்... என்னை மாதிரியே பிடிவாதம் அவர்க்கும் இருக்கு... இன்னிக்கு வீட்டுக்கு வந்த புரோக்கர்கிட்ட அவர் பேசிட்டிருந்ததை நான் கேட்டேன்... எனக்கு வரப்போகிற வரனுக்கு பத்து லட்ச ரூபா மதிப்பாவது இருக்கணும்ன்னு சொல்லிட்டிருந்தார்...''

சபரி - முகம் மாறியிருந்தான். அபிநயா கேட்டாள்.

''நீங்க என்ன பண்ணப் போறீங்க சபரி?''

''ராஜினாமா பண்ணிடலாம்னு இருக்கேன்.''

''ராஜினாமாவா...? எதை ராஜினாமா பண்ணப் போறீங்க?''

''என்னோட 'காதலன்' உத்யோகத்தை.''

''சபரி!'' மெலிதாய் கத்தினாள் அபிநயா. ''இந்த வார்த்தையை தமாஷுக்குக் கூட சொல்லாதீங்க.''

''வேற என்ன பண்ணச் சொல்றே அபி? வீட்டு வாடகையை பத்து ரூபாய் ஏத்தினாலே - அதை நினைச்சு ராத்திரி பூராவும் தூங்காமே புரண்டுட்டிருக்கிற நடுத்தர வர்க்க ஜாதி நான். குருடனுக்கு கோஹினூர் வைரம் கிடைச்ச மாதிரி உன்னோட காதல் எனக்கு கிடைச்சிருக்கு. நீ என்னை விரும்பறதா என்கிட்ட சொன்னப்பவே நான் உனக்கு 'காஷன்' கொடுத்தேன். 'இந்தக் காதல், கல்யாணத்துல போய் முடியும்ங்கிற நம்பிக்கை எனக்கில்லை; நிறைய பிரச்னைகளை சந்திக்க வேண்டி வரும்'ன்னு சொன்னேன்... நீ கேட்கலை... உங்கப்பா உன்னோட ஆசைக்கு குறுக்கே நிக்க மாட்டார்ன்னு நீதான் சொன்னே... இன்னிக்கு... அவரே வரப்போகிற மாப்பிள்ளைக்கு பத்து லட்ச ரூபா மதிப்பு சொத்தாவது இருக்கணும்ன்னு சொல்றார்... இந்த மாச மளிகை சாமானை வாங்கிட்டுப் போறதுக்காக - ஆபீஸ்ல அட்வான்ஸ் கேக்க வேண்டிய நிலைமையில இருக்கிற எனக்கு இதெல்லாம் சாத்தியமா படலை அபி...!''



''உங்க ஒப்பாரியை கொஞ்சம் நிறுத்தறீங்களா சபரி?''

''அபி!''

''நம்ம கல்யாணம் நடக்கத்தான் போகுது...''

''பஞ்சாயத்து தேர்தல் நடந்தாலும் நடக்குமே தவிர, நம்ம கல்யாணம் நடக்காது.''

''பிரச்னைகளைப் பார்த்து நீங்க பயப்படறீங்க சபரி...''

''இது பயப்படறப் பிரச்னை... அபி! அதனால் தான் பயப்படறேன்.'' - அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே வெயிட்டர் பவ்யமாய் குனிந்து மெனுகார்டை நீட்டினான். அபிநயா மெனுகார்டை தள்ளி வைத்து விட்டு சொன்னாள்.

''ரெண்டு ஆரஞ்ச் மில்க் ஷேக்...''

வெயிட்டர் நகர - சபரி சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க...?'' - அபிநயா கேட்டாள்.

''நான் இப்போ குடிக்கப் போற 'ஆரஞ்சுமில்க் ஷேக்'குக்கு கூட நீ தான் பில் 'பே' பண்ணப் போறே...! ஒரு ஹோட்டல் பில்லைக்கூட 'பே' பண்ண முடியாத என்னால உங்கப்பாவுக்கு எப்படி பொருத்தமான மாப்பிள்ளையா இருக்க முடியும்...?''

''எல்லாம் முடியும்....''

''எப்படி....?''

''பொய் சொல்லணும்.''

''என்னான்னு பொய் சொல்லணும்...?''

''நான் சொல்லித் தர்றேன்...''

''பொய்சொல்லி கல்யாணம் பண்ணிக்க எம் மனசுக்கு சம்மதமில்லை அபி... பொய் சொல்லி கல்யாணம் பண்ணிக்கிறதைக் காட்டிலும், உங்கப்பாவுக்குத் தெரியாமலேயே ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிகிட்டு நேரா அவர் காலில் போய் விழுந்துடலாம்...''

''அப்படி திருட்டுத்தனமா கல்யாணம் பண்றது எனக்கு பிடிக்காது சபரி. உங்களையும் நான் இழக்க விரும்பலை... எங்க சொத்தையும் நான் இழக்க விரும்பலை. நான் அப்பாவுக்கு விரோதமா கல்யாணம் பண்ணிகிட்டா அவர் சொத்துல ஒரு சல்லிக்காசு கூட எனக்குக் கிடைக்காது. அவரோட சம்மதத்தின் பேர்லதான் இந்தக் கல்யாணம் நடக்கப் போகுது...''

''எப்படி நடக்கும்...?''

''உங்களுக்கு பணக்கார மூலாம் பூசணும்...''

''மூலாம் பூசினா எதுவும் நிக்காது அபி...''

சபரி சிரித்தான்.

'ஆரஞ்சு மில்க் ஷேக்' நீளமான கண்ணாடி டம்ளர்களில் ஐஸ் துண்டங்களோடு டேபிளில் வந்து உட்கார்ந்தது.

இருவரும் எடுத்துக் கொண்டார்கள்.

''சபரி! இந்த விஷயத்துல நீங்க தைரியமா சொல்லுவீங்கன்னு நினைச்சேன். ஆனா நீங்களே பயப்படறீங்க...''

''நாம என்னதான் பொய் சொன்னாலும் நாளைக்கு விஷயம் வெளியே தெரிஞ்சா அசிங்கமாயிடும் அபி... அப்ப* மாத்திர உங்கப்பாவுக்கு கோபம் வராதா என்ன?''

''நான் சமாளிச்சுக்கிறேன்.''

ஆரஞ்சு ஜூஸை ஒருவாய் விழுங்கி கொண்டே சபரி கேட்டான். ''எனக்கு பணக்கா மூலாம் பூசறதா சொன்னியே அபி! எப்படி பூச போறே?''

''இன்னும் ரெண்டு நாள்ல சொல்றேன்''

சொல்லிவிட்டு ஆரஞ்சு நிற பானத்தை உறிஞ்ச ஆரம்பித்தாள் அபிநயா.



## 3

ஹோட்டல் சூர்யா.

கீழ்த்தள பார்.

ஜானிவாக்கர் விஸ்கி பாட்டிலை கொஞ்சம், கொஞ்சமாய் காலிசெய்து வயிற்றுக்குள் இறக்கிக் கொண்டிருந்தான் தினகர். மேஜையின் மேல் மினுத்துானில் வறுபட்ட சிக்கன் பீங்கான் தட்டில் உட்கார்ந்திருந்தது.

ஹோட்டல் பார் பூராவும் ஒரு கள்ளத்தனம் பரவியிருக்க, வெயிட்டர்கள் சத்தமில்லாமல் பூனை நடைபோட்டு பரிமாறினார்கள்.

தினகர் சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டு வாசல் பக்கமாய் அடிக்கடி திரும்பிப் பார்த்து புகைவிட்டான். அவனுடைய போதையான கண்களில் ஒரு கவலையும் உட்கார்ந்திருந்தது.

தினகர் ஒரு ராஜா வீட்டு கன்னுக்குட்டி. அப்பா, லாபத்தில் ஒடும் ஒரு மில்லுக்குச் சொந்தக்காரர். பைசா பைசாவாய் சேர்த்து முன்னுக்கு வந்தவர். அதனால் செலவு செய்வதில் தயக்கம் காட்டினார். தினகரனின் பாக்கெட் மணிக்கு 'ரேஷன்' வைத்து அமல் படுத்தி வந்தார். ப்ளஸ் டூ படிக்கிற காலத்திலேயே தினகர் கோல்கொண்டா விஸ்கியை ருசி பார்த்தவன்... பி.எஸ்.சி. படிக்கிற இந்த வயசில் ஆம்மாயிருப்பானா...? லீபாரின் சரக்குக்காக பாருக்கே வர ஆரம்பித்தான். பட்ஜெட் குழந்தையாய் மாறி பாக்கெட்டை உதைத்தது.

''ஸாரிடா தினகர்... ஒர்க்ஷாப்பை விட்டு கிளம்பறப்ப ஒரு பார்ட்டி வந்துட்டான்.... அட்டெண்ட் பண்ணிட்டு வர நேரமாயிடுச்சு.''

சொல்லிக் கொண்டே தினகரை நெருங்கிய இளைஞனுக்கு முப்பது வயது இருக்கலாம்... விஜய்காந்த் நிறம். முகத்தில் ஒரு முரட்டுத்தனம் உறைந்திருந்தது. மீசையை கிருதா வரைக்கும் வளர்த்திருந்தான்.

''வாடா... மோகன்...! நீ... என்னிக்குத்தான் நான் சொன்ன நேரத்துக்கு வந்திருக்கே... உட்கார்...''

மோகன் எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். தினகர் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டு நசுக்கிக் கொண்டே கேட்டான்...

''என்னடா... டம்ளர் கொண்டுவரச் சொல்லட்டுமா...? சாப்ட்றியா?''

''வேண்டாம்...''

''ஏன்டா...?''

''சாப்டுட்டு வீட்டுக்குப் போனா சரோஜா கோபிச்சுக்கிட்டு அம்மா வீட்டுக்குக் கிளம்பிப் போயிடறா... ஒரு வாரத்துக்கு முன்னாடிதான் இனிமே குடிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணி குடுத்தேன்.''

''பொண்டாட்டியைப் பார்த்து ஏண்டா பயப்படறே?''

''அப்படியே பழகிப்போச்சு.''

தலையில் அடித்துக் கொண்டான் தினகர். மோகன், நாற்காலியின் நுனி சீட்டுக்கு நகர்ந்து, முழங்கைகளை டேபிளின் மேல் ஊன்றிக் கொண்டு தினகரைப் பார்த்துக் கேட்டான்.

''அவசரமாய் வரச் சொன்னியே. என்னடா விஷயம்?''

ஸ்காட்ச்சின் பொன் திரவத்தைக் கண்ணாடி டம்ளரில் வார்த்துக் கொண்டே தினகர் அவனை ஏறிட்டான்.

''உன்னோட உதவி எனக்கு வேணும்.''

''மொதல்ல விஷயத்தைச் சொல்லுடா.''

''உன்னோட ஒர்க்ஷாப்பை எக்ஸ்டெண்ட் பண்ணி சர்வீஸ் ஸ்டேஷன் கட்டப் போறதா சொன்னியே. அந்த பிளான் எதுவரைக்கும் ப்ராக்ரஸ்ல வந்திருக்கு?''

உதட்டைப் பிதுக்கி 'உச்' கொட்டினான் மோகன்.

''பாங்க் லோன் கிடைக்கலை.''

''பாங்க்ல நீ எவ்வளவு கேட்டிருந்தே...?''

''நாப்பதாயிரம்.''

''நான் உனக்கு அம்பதாயிரம் தர்றேன்.''

''என்னடா சொல்றே...? போன மாசம் உன்கிட்ட கடன் கேட்டப்போ 'ஒரு நூறு ரூபாய் நோட்டைக்கூட உனக்குத் தர முடியாத நிலைமையில இருக்கேன். ஸாரிடா'ன்னு சொன்ன நீ, இப்போ அம்பதாயிரம் ரூபா தரப் போறியா எப்படி, எப்படி?''

''என்னோட திட்டத்துக்கு நீ ஒத்துழைக்கணும்.''



''திட்டமா...?''

''ம்... இன்னும் கொஞ்சம் முன்னாடிவா. நான் சொல்லப் போறதை கவனமா கேக்கணும்... என்னோட திட்டத்துக்கு நீ ஒத்துழைக்க விரும்பலைன்னா தாராளமா கழண்டுக்கலாம். ஆனா விஷயத்தை வெளியில சொல்லக் கூடாது.''

''சரி... மொதல்ல நீ விஷயத்தைச் சொல்லு.''

தினகர் பார் பூராவையும் தன் பார்வையில் ஒருமுறை கழுவிக் கொண்டு சொல்ல ஆரம்பித்தான்.

''மோகன்! எப்படியோ இந்த குடிப்பழக்கத்துக்கு ஆளாகி ஏறக்குறைய அடிக்ட் ஆயிட்டேன். தினசரி சூரியன் உதிக்கிற மாதிரி குடிக்கணும்ங்கிற ஆசை எம்மனசிலேயும் உதிக்குது. சாயந்தரமானா பாரை நோக்கி என்னையும் அறியாமே நடக்க ஆரம்பிச்சுடறேன். ஆக அப்பா தர்ற பணம் இதுக்கெல்லாம் தீர்த்தம் தெளிக்கிற மாதிரிதான். அப்பாவை நேரிடையா பணம் கேட்டு பார்த்துட்டேன். அவர் முகத்துக்கு நேரா கையை ஆட்டி பாக்கெட் மணிக்கு மேலே அதிகப்படியா ஒரு பைசா கூட தரமாட்டேன்னு சொல்லிட்டார்''

தினகர் பேச்சை நிறுத்திவிட்டு-டம்ளரிலிருந்த விஸ்கியை ஒரு வாய் விழுங்கினான். தொடர்ந்தான்.

''எங்கப்பா என்னை என்னதான் திட்டினாலும், அவர்க்கு என்மேல் அபார பாசம். ராத்திரி நான் வீடு வந்து சேர்ந்த பின்னாடிதான் அவர் தூங்கப் போவார். அந்த பாசத்தைத்தான் நான் என்னோட திட்டத்துக்கு ஆயுதமா உபயோகப்படுத்தப் போறேன்...''

''எப்படி...?''

''நீ என்னைக் கடத்தப் போறே...!''

''டேய் தினகர்...''

''பயப்படாதே... இது ஒரு பாவ்லா திட்டம். நான் இன்னிக்கு ராத்திரியே ஏதாவது ஒரு வெளியூர் போயிடுவேன். லாட்ஜ்ல ரூம் எடுத்து ரெண்டு நாள் தங்கப் போறேன். ரூமை விட்டு வெளியே வராமே நான் லாட்ஜ்ல உட்கார்ந்திட்டிருக்கிற நேரம் - நீ இதே ஊர்ல இருந்துகிட்டு எனக்கு உதவப் போறே.

ஏதாவது ஒரு டெலிபோன் பூத்திலிருந்து
எங்கப்பாவுக்கு போன் பண்ணி 'உங்க மகன் தினகர்
உங்களுக்கு உயிரோடு திரும்பக் கிடைக்கணும்ன்னா
ரெண்டு லட்ச ரூபாயை ஒரு ப்ரீப் கேஸ்ல போட்டு
இன்ன இடத்துல கொண்டு வந்து வெய்க்க
ணும்'ன்னு சொல்லணும். 'போலீஸ¬க்கு விஷயம்
போனா உங்க மகன் பரலோகத்துக்கு
போயிடுவான்'னு மிரட்டணும். எங்கப்பா நிச்சயமா
மிரண்டிடுவார். எம்மேல இருக்கிற பாசம் அவரை
பணத்தோட வரச் சொல்லும். பணம் உன் கைக்கு
வந்ததும் நீ எனக்கு தகவல் தர்றே. நான் வர்றேன்.
பேசினபடி உனக்கு அம்பதாயிரம் கொடுத்துட்டு
மிச்சப் பணத்தை என்னோட செலவுக்கு வெச்சுக்க
போறேன்.''

''அம்மா... அபிநயா...''

அப்பா சந்தானகிருஷ்ணனின் குரல்கேட்டு
மாத நாவலொன்றில் மூழ்கியிருந்த அபிநயா
திரும்பினாள்.

''மணி பத்தாகப் போகுது.. தூங்காமே
என்னம்மா படிச்சுட்டிருக்கே?''

''நாவல்...''

''காலையில படிக்கக் கூடாதாம்மா?''

''இதோ முடிச்சுட்டேம்பா...! கடைசி பத்து
பக்கந்தான்.''

''சீக்கிரம் படும்மா'' - சொல்லிக் கொண்டே த
அறையை நோக்கி நடந்தார் சந்தானகிருஷ்ணன்.

நாவலைத் தொடர்ந்தாள் அபிநயா.

'தினகர் சொன்ன திட்டத்துக்கு மோகன் ஒப்பு
கொண்டானா?' என்பதை அறிந்
கொள்வதற்காக இருதயம் தவிக்க, வரிகளை
வேகமாய் மேய்ந்தாள் அபிநயா.

மோகனின் முகம் பயத்தில் இருந்தது.

தினகர் போதையோடு கேட்டான். ''என்ன
சொல்றே மோகன்? என்னோட திட்டத்துக்கு
கோவாப்பரேட் பண்றியா? சுலபமா அம்பதாயிர
அள்ளலாம்.''

''உங்கப்பா போலீஸ¬க்கு போக மாட்டாரா?''

''போலீஸ¬க்கு போக மாட்டார்.''

அபிநயா அடுத்த வரிக்கு போவதற்குள்



பாயின் மேலிரு... டும்.'

அபிநயா என... யலை உண்டாக்கு.'

பக்கத்தை கி... தற்கான வழிமுறைகளை
ரிஸீவரை எடு... இரி பூராவும் யோசித்து
''ஹலோ... ... அந்த முடிவுக்கு
''இது சந்...
ஆண் குரல்...
''ஆமா...
''நான் ... ப் படித்து
அப்பா இ... ரி.
''இருச... ...ானிகல்
''கொ...
''லை... ...தாம்
எக்ஸ்...
சந்தானகிருஷ...
டெலிபோனைக் கூப்பிட...
சந்தானகிருஷ்ணன் கேட்டார்.

''என்னம்மா?''

''புரோக்கர் போன்ல பேசுறாரப்பா!''

''யாரு? சிவகுருநாதனா?''

''ம்''

''கனெக்ஷன் குடும்மா''

கொடுத்தாள்.

தன் காதிலும் ரிஸீவரை ஒட்ட வைத்துக்
கொண்டாள்.

''என்னய்யா இந்த நேரத்துக்கு போன்?
எங்கிருந்து பேசுறீர்?''

''திருச்சியிலிருந்து.''

''என்ன விஷயம்?''

''ஜி.ஆர்.ஜி. எண்ட்டர்பிரைசஸ் கங்காதரன்னு
சொன்னா எல்லார்க்கும் தெரியும். அவரோட சன்
பிரசாத் டாக்டர்க்கு படிச்சுட்டு அமெரிக்காவுல
இருக்கார். அடுத்த மாசம் இந்தியா திரும்பறாராம்.
நம்ம பொண்ணு போட்டோவை
கங்காதரன்கிட்டே காட்டினேன். அவருக்கும்
அவரோட சம்சாரத்துக்கும் பொண்ணை
ரொம்பவும் பிடிச்சிருக்கிறதா சொன்னாங்க.
பொண்ணை ஒருதரம் நேர்ல பார்க்க
பிரியப்படறதா சொல்றாங்க. உங்க வசதியை

ஏதாவது ஒரு டெலிபோன் பூத்திலிருந்து எங்கப்பாவுக்கு போன் பண்ணி 'உங்க மகன் தினகர் உங்களுக்கு உயிரோடு திரும்பக் கிடைக்கனும்ன்னா ரெண்டு லட்ச ரூபாயை ஒரு ப்ரீப் கேஸ்ல போட்டு இன்ன இடத்துல கொண்டு வந்து வெய்க்கனும்'ன்னு சொல்லனும். 'போலீஸுக்கு விஷயம் போனா உங்க மகன் பரலோகத்துக்கு போயிடுவான்'னு மிரட்டணும். எங்கப்பா நிச்சயமா மிரண்டிடுவார். எம்மேல இருக்கிற பாசம் அவரை பணத்தோட வரச் சொல்லும். பணம் உன் கைக்கு வந்ததும் நீ எனக்கு தகவல் தர்றே. நான் வர்றேன். பேசினபடி உனக்கு அம்பதாயிரம் கொடுத்துட்டு மிச்சப் பணத்தை என்னோட செலவுக்கு வெச்சுக்கப் போறேன்.''

''அம்மா... அபிநயா...''

அப்பா சந்தானகிருஷ்ணனின் குரல் கேட்டு மாத நாவலொன்றில் மூழ்கியிருந்த அபிநயா திரும்பினாள்.

''மணி பத்தாகப் போகுது.. தூங்காமே என்னம்மா படிச்சுட்டிருக்கே?''

''நாவல்...''

''காலையில படிக்கக் கூடாதாம்மா?''

''இதோ முடிச்சுட்டேம்பா...! கடைசி பத்து பக்கந்தான்.''

''சீக்கிரம் படும்மா'' - சொல்லிக் கொண்டே தன் அறையை நோக்கி நடந்தார் சந்தானகிருஷ்ணன்.

நாவலைத் தொடர்ந்தாள் அபிநயா.

'தினகர் சொன்ன திட்டத்துக்கு மோகன் ஒப்புக் கொண்டானா?' என்பதை அறிந்து கொள்வதற்காக இருதயம் தவிக்க, வரிகளை வேகமாய் மேய்ந்தாள் அபிநயா.

மோகனின் முகம் பயத்தில் இருந்தது.

தினகர் போதையோடு கேட்டான். ''என்ன சொல்றே மோகன்? என்னோட திட்டத்துக்கு கோவாப்பரேட் பண்றியா? கலபமா அம்பதாயிரம் அள்ளலாம்.''

''உங்கப்பா போலீஸுக்கு போக மாட்டாரா?''

''போலீஸுக்கு போக மாட்டார்.''

அபிநயா அடுத்த வரிக்கு போவதற்குள் - டீபாயின் மேலிருந்த டெலிபோன் கூப்பிட்டது.



அபிநயா எரிச்சலோடு படித்துக் கொண்டிருந்த பக்கத்தை சின்னதாய் மடித்து வைத்து விட்டு ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

''இது சந்தானகிருஷ்ணன் வீடுங்களா?'' - ஒரு ஆண் குரல் கேட்டது.

''ஆமா. நீங்க யாரு?''

''நான் புரோக்கர் சிவகுருநாதன் பேசறேன்மா. அப்பா இருக்காரா?''

''இருக்கார்.''

''கொஞ்சம் கூப்பிட்டு விடும்மா, பேசணும்?''

''லைன்லேயே இருங்க'' - சொன்ன அபிநயா எக்ஸ்டென்ஷன் பட்டனை அழுத்தி சந்தானகிருஷ்ணனின் அறையிலிருந்து டெலிபோனைக் கூப்பிட்டாள்.

சந்தானகிருஷ்ணன் கேட்டார்.

''என்னம்மா?''

''புரோக்கர் போன்ல பேசறாரப்பா!''

''யாரு? சிவகுருநாதனா?''

''ம்''

''கனக்ஷன் குடும்மா''

கொடுத்தாள்.

தன் காதிலும் ரிஸீவரை ஒட்ட வைத்துக் கொண்டாள்.

''என்னய்யா இந்த நேரத்துக்கு போன்? எங்கிருந்து பேசறீர்?''

''திருச்சியிலிருந்து.''

''என்ன விஷயம்?''

''ஜி.ஆர்.ஜி. எண்ட்டர்பிரைசஸ் கங்காதரன்னு சொன்னா எல்லார்க்கும் தெரியும். அவரோட சன் பிரசாத் டாக்டர்க்கு படிச்சுட்டு அமெரிக்காவுல இருக்கார். அடுத்த மாசம் இந்தியா திரும்பறாராம். நம்ம பொண்ணு போட்டோவை கங்காதரன்கிட்டே காட்டினேன். அவருக்கும் அவரோட சம்சாரத்துக்கும் பொண்ணை ரொம்பவும் பிடிச்சிருக்கிறதா சொன்னாங்க. பொண்ணை ஒருதரம் நேர்ல பார்க்க பிரியப்படறதா சொல்றாங்க. உங்க வசதியை

தெரிஞ்சுக்கிட்டு இந்த வாரத்துல ஏதாவது ஒருநாள் கூட்டிட்டு வரலாம்னு நினைக்கிறேன்.''

''குடும்பம் எப்படிய்யா...?''

''மரியாதைப்பட்ட குடும்பம்.''

''சொத்து மதிப்பு?''

''கிட்டதட்ட உங்களுக்கு இடுப்புக்கு வருவாங்க.''

''இருபது லட்சம் தேறுமா?''

''தேறும்.''

''பையனைப் பத்தி நல்லா விசாரிச்சீரா?''

''விசாரிக்காமே உங்களுக்கு போன் பண்ணுவேனா?''

''சரி... எப்ப கூட்டிட்டு வர்றீர்?''

''நாளை கழிச்சு மறுநாள் கூட்டிட்டு வரட்டுமா?''

''ம். கூட்டிட்டு வாரும். எத்தனை பே வருவாங்க?''

''பத்து பதினைஞ்சு ஜனம் வருவாங்க.''

''வரட்டும் வரட்டும்.''

சொல்லிக் கொண்டே சந்தானகிருஷ்ண போனை அணைத்துவிட - அபிநயாவும் ரிஸீவ சாத்தினாள். நெஞ்சுப் பிரதேசம் பூராவு ஏராளமான இகில் குதிரை ஓடின. நெற் வியர்வையில் பொடித்தது.

அப்படியே தளர்ந்து போய் கட்டிலி உட்கார்ந்தாள். மனசுக்குள் கரைந்தாள். 'திடீரெ விழுந்து விட்ட இந்த கல்யாண வலையிலிருந்து கடவுளே...! எப்படி தப்பிக்கப் போகிறேன்?'

'அப்பா காட்டுகிற ஆர்வத்தைப் பார்த்தா இந்த திருச்சி சம்பந்தம் படிந்து விடும் போ தெரிகிறது.'

'சபரி! சபரி!'

'உங்களைத் தயார் செய்வதற்குள் - எ கழுத்தில் தாலி விழுந்துவிடும் போலிருக்கிறதே

'சபரியைப் பற்றி அப்பாவிடம் சொல்லி பார்க்கலாமா?''

'வேண்டாம். சொல்லாதே! விபரீதத்தை நீ விலைக்கு வாங்கிக் கொள்ளாதே. பெண்ணே சொன்னால் வெளியே கிளம்பிப் போகிற இ



சுதந்திரமும் போய்விடும்.'

'மௌனமாய் ஒரு புயலை உண்டாக்கு.'

புயலை உண்டாக்குவதற்கான வழிமுறைகளை யோசித்தாள் அபிநயா. ராத்திரி பூராவும் யோசித்து விடிகாலை மூன்று மணிக்கு அந்த முடிவுக்கு வந்தாள் அபிநயா.

## 4

அந்த மாத நாவலைப் படித்து முடித்து கீழே வைத்தான் சபரி.

இடம்: அக்ரிகல்சுரல் பொட்டானிகல் கார்டன்.

நேரம்: இருட்டிக் கொண்டு வருகிற சாயந்தரம் ஆறு மணி. சபரிக்கு எதிரே முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த அபிநயா கேட்டாள்.

''நாவல் எப்படியிருக்கு சபரி?''

''பரவாயில்லை. இதே மாதிரி கதையை ஹாட்லி சேஸ் கூட எழுதியிருக்கார். இப்போ எதுக்காக இந்த நாவலை என்னை படிக்கச் சொன்னே?''

''காரியமாத்தான்''

''எனக்குப் புரியலை...''

''நாவலில் வர்ற இளைஞர் தன்னோட செலவுக்கு பணம் வேணும்ங்கிறதுக்காக ஒரு கிட்நாப்பிங் பிளானைச் சொல்றான். அந்த பிளான் எனக்கு பிடிச்சிருக்கு.''

''அபி... நீ என்ன சொல்றே?'' - லேசாக பதற்றமானான் சபரி. அபிநயா புன்னகைத்தாள்.

''நானும் நீங்களும் அந்த பிளானை எக்ஸிக்யூட் பண்ணப் போறோம். கொஞ்சம் ரிஸ்கியான பிளான்தான்... கேர்புல்லா பண்ணினா சக்ஸஸ்தான்.''

சபரியின் முகம் நிறம் தப்பிப் போயிருந்தது.

அபிநயா தொடர்ந்தாள்.

''ஒரு ரெண்டுமணி நேரம் நாம இந்த கடத்தல் நாடகத்தைப் போட்டாப் போதும் சபரி. பத்து லட்சத்தை கண்ணால பார்த்துடலாம். நான் கடத்தப்பட்டிருக்கேன்னு சொன்னா போதும்;

அவர் ஒரு நிமிஷம் கூட தாங்க மாட்டார். பணத்தைக் கொண்டு வந்து கொட்டிட்டு என்னைக் கூட்டிட்டு போயிடுவார்.''

சபரி பயமாய் நகம் கடித்து துப்பினான்.

''அபி, உனக்கு ரொம்பவும் துணிச்சல் அதிகம்''

''துணிச்சல் உள்ளவங்கதான் காதலிக்கனும் சபரி. நாம இந்த திட்டத்தை பணத்துக்காக செய்யலை. நம்ம கல்யாணத்துக்காகத்தான் செய்யறோம்.''

''சரி. உன்னோட திட்டம்தான் என்ன? சொல்லு பார்க்கலாம்!''

அபிநயா கொஞ்சம் நகர்ந்து சபரியின் அருகே வந்து உட்கார்ந்தாள். பொட்டானிகல் கார்டன் பூராவும் சாம்பல் தனமான இருட்டு கவிழ்ந்து கொண்டிருந்தது. தொலை தூரம் பட்சிவர்க்கங்கள் ஏகப்பட்ட இரைச்சலோடு மரங்களை அடைத்துக் கொண்டிருந்தன. கார்டனில் அலைந்து கொண்டிருந்த சொற்ப கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாய் கலைய ஆரம்பித்தார்கள்.

அபிநயா சொன்னாள்: ''நாளைக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு நம்ம திட்டம் ஆரம்பமாகும் சபரி. நீங்களும் நானும் டவுன்பஸ் பிடிச்சு சரவணம்பட்டி போறோம். அங்கே ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு பத்ரகாளியம்மன் கோயில் இருக்கு. நானும் அப்பாவும் ஒரு தடவை அந்த கோயிலுக்குப் போயிருக்கோம். கொஞ்சம் பாழடைஞ்சு போயிருந்தாலும் அழகான கோயில்.''

''அந்தக் கோயில்ல நீ தங்கிக்கப் போறே. அப்படித்தானே?'' - சபரி கேட்க தலையை ஆட்டினாள் அபிநயா.

''ஆமா. நான் அந்த கோயில்ல இருக்கிற நேரம் நீங்க ரோட்டுக்கு வந்து ஏதாவது ஒரு டெலிபோன் பூத்திலிருந்து எங்கப்பாவுக்கு போன் பண்ணி பேசணும். என்னை உயிரோடு பார்க்க விரும்பினா பத்துலட்சம் ரூபாயை ஒரு ப்ரீப் கேஸ்ல போட்டு மருதமலை போற ரோட்ல ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி கொண்டு வந்து வெச்சுட்டு போகச் சொல்லணும். பணம் கைக்கு



வந்து பதினைஞ்சு நாளானதும் எங்கப்பாகிட்ட உங்களைக் கூட்டிப் போய் எனக்கு வரப்போகிற கணவரா அறிமுகப்படுத்தப் போறேன். கையிலிருக்கிற பத்துலட்ச ரூபா உங்களை அந்தஸ்துக்கு கொண்டு போயிடும்.''

''உங்கப்பாவுக்கு விஷயம் தெரிஞ்சுட்டா?''

''எப்படி தெரியும் சபரி? விஷயம் வெளியே வரணும்னா ஒண்ணு நீங்க சொல்லணும். இல்லே நான் சொல்லணும்.''

''ஒரே ராத்திரியில நான் பணக்காரனா மாறினா மத்தவங்களுக்கு சந்தேகம் வராதா அபி? முக்கியமா இன்கம்டாக்ஸ் ஆசாமிகளுக்கு.''

''உங்ககிட்ட பணம் இருக்கிற விஷயம் வெளியே யார்க்கும் தெரிய வேண்டாம் சபரி. நான் உங்களை அப்பாகிட்டே எப்படி அறிமுகப் படுத்தப் போறேன் தெரியுமா? உங்க பூர்வீகம் மலேயான்னு சொல்லப்போறேன். மலேயாவில் இருக்கப் பிடிக்காமே அங்கிருந்த சொத்து பூராவையும் வித்து இந்தியன் கரன்சியா மாத்திட்டு - நீங்க இங்கே வந்ததா சொல்வேன்''

சபரி கன்னத்தைச் சொறிந்தான்.

''எனக்கென்னமோ இந்தத் திட்டம் அவ்வளவு சரியா படலை அபி. உங்கப்பாகிட்டே ஏகப்பட்ட பொய் சொல்லப் போறோம். ஏதாவது ஒரு பொய்யில் மாட்டிக்கிட்டாலும் எல்லா பொய்யும் வெட்ட வெளிச்சமாயிடும்.''

அபிநயா சிரித்தாள்.

''அப்படி மாட்டிக்கிட்டாலும் நீங்க கவலைப்பட வேண்டாம் சபரி. உண்மையைச் சொல்லத்தான் நான் இருக்கேன். எல்லாத்துக்கும் காரணம் நான்தான்னு அப்பாகிட்டே சொல்லிடப் போறேன். எங்க கல்யாணம் நடக்கணும்ங்கிறதுக்காகத்தான் அந்த கடத்தல் நாடகம் போட்டோம்னு உடைச்சு சொல்லிடறேன்.''

''அபி.''

''ம்''

''அப்படியெல்லாம் செஞ்சுட்டு பின்னாடி அவஸ்தை படறதைக் காட்டிலும் இப்பவே போய் உண்மையைச் சொல்லிட்டா என்ன?''

அபிநயா உதடு பிரியாமல் சிரித்தாள். ''சபரி! நம்ம காதல் விவகாரத்தைப் பத்தின நியூஸ் லேசா கசிஞ்சு எங்கப்பா காதுக்கு போனாலும் போதும். நான் வீட்டை விட்டு வெளியே வரமுடியாது. அடுத்த மாசம் நடக்க வேண்டிய என்னோட கல்யாணம் இந்த மாசம் நடந்துடும். அப்புறம் நீங்க தாடி வளர்த்துகிட்டு ஆபீஸுக்கு போயிட்டு வர வேண்டியிருக்கும்.''

சபரி ஒன்றும் பேசாமல் புல்லைப் பிடுங்கி - பிடுங்கி வெறித்த பார்வையோடு வீசிக் கொண்டிருந்தான். அபிநயா அவனுடைய தோளைப் பற்றி உலுப்பினாள்.

''என்ன பதிலையே காணோம்?''

''நிறைய யோசிக்கணும் அபி.''

''இதுல யோசனை பண்றதுக்கு ஒண்ணுமேயில்லை சபரி. இது ஒரு விளையாட்டு மாதிரிதான்.''

''விளையாட்டே சில சமயம் விபரீதமாயிடும்''

''அது நாம ரெண்டு பேரும் சேர்ந்து விளையாடற விளையாட்டு; விபரீதம் வர்றதுக்கு வாய்ப்பே இல்லை சபரி. நாம எதையுமே செய்யாமே இருந்தாத்தான் கல்யாணம்ங்கிற பேர்ல விபரீதம் வரும்.''

''அபி.''

''சொல்லுங்க சபரி.''

''நாளைக்கு விஷயம் வெளியே தெரிஞ்சு உங்கப்பா எம்மேல கோபப்படறப்போ நீதான் உண்மையைச் சொல்லணும்... அந்தப் பழியிலிருந்து நீதான் காப்பாத்தணும்...''

''நானிருக்க பயமேன் என் கோழைக் காதலனே!'' - அபிநயா கரத்தை உயர்த்தி அபயம் காட்டி சிரித்தாள்.

## 5

மறுநாள் சாயந்தரம் ஆறுமணி.

காந்தி புரத்தில் சிட்டி பஸ்ஸைப் பிடித்து - அரைமணி நேரம் பயணம் செய்து பதினைஞ்சு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த சரவணம்பட்டியில் இறங்கிக் கொண்டார்கள் சபரியும் அபிநயாவும்.



சாயந்தர சூரியன் சாகும் தறுவாயில் இருந்தான்.

சரவணம்பட்டி கிராமம் அரைகிலோ மீட்டர் தூரத்தில் ஏராளமான குடிசைகளோடு தெரிய, அதைப் புறக்கணித்து விட்டு - பொட்டல் வெளியில் தெரிந்த ஒற்றையடிப் பாதையில் நடந்தார்கள். சபரி கேட்டான்.

''கோயில் ரொம்ப தூரமா... அபி?''

''பக்கந்தான். பத்தே நிமிஷம். போயிடலாம்.''

''நீயும் உங்கப்பாவும் எதுக்காக இந்த கோயிலுக்கு வந்தீங்க?''

''விலாவாரியா சொல்லட்டுமா? இல்லே சுருக்கமா சொல்லட்டுமா?''

''சுருக்கமாவே சொல்லு.''

''எங்கப்பாவுக்கு சொந்த ஊர் சத்தியமங்கலம். அவர் இந்த கோயமுத்தூர்க்கு வர்றப்போ கையில காசில்லாமேதான் வந்தாராம். பஸ்ஸுக்கு தர்ற காசை மிச்சம் பிடிச்சா ஒருவேளை வயிறார சாப்பிடலாமேன்னு நினைச்சு சத்தியமங்கலத்திலிருந்து கோயமுத்தூர்க்கு நடந்தே வந்தாராம்... வர்ற வழியில ஒரு ராத்திரி பூராவும் அந்த பத்ரகாளியம்மன் கோயில்லதான் படுத்து தூங்கினாராம். அதை அடிக்கடி நினைச்சுகிட்டு இந்தக் கோயிலுக்கு வந்துடுவார்.''

''உங்கப்பாவுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுத்த அதே கோயில்தான் இப்ப நமக்கும் ஒரு வாழ்க்கையைக் கொடுக்கப் போகுது.''

''நானும் அந்த எண்ணத்தில்தான் இந்த இடத்தை செலக்ட் பண்ணினேன் சபரி.''

கொஞ்ச தூரம் போனதும் கோயிலின் கோபுரம் சின்னதாய் தெரிந்தது.

''அந்தக் கோயிலா...?''

''அதேதான்.''

சபரி சுற்றும் முற்றும் பார்த்தான்.

பார்வை எட்டின வரைக்கும் ஆள் நடமாட்டமில்லை. வரிசையாய் தென்னை மரங்களும், காய்ந்து போன வயல் காடுகளும் விரிந்து கிடந்தன.

''என்ன அபி, ஆள் நடமாட்டத்தையே காணோம்? அந்த இடத்துல நீ எப்படி தனியா இருக்கப் போறே?''

''ஆள் நடமாட்டம் இருக்கிற இடத்துல தான் பயம் வரும் சபரி. இந்தக் கோயிலுக்கு யாரும் வரமாட்டாங்க. நம்ம திட்டத்துக்கு தோதான இடம்.''

கோயிலை நெருங்கினார்கள்.

கோயில் வெகு புராதனம்.

''அபி! இந்த கோயிலுக்கு பூசாரி இல்லையா?''

''இருக்காராம், ஆனா அவர் தினசரி வரமாட்டாராம். அமாவாசையன்னிக்கு மட்டும் வருவாராம். ஜனங்களும் அன்னிக்குத்தான் வருவாங்களாம்.''

''நான் போன் பண்ணப் போயிட்டா நீ மட்டும் இந்த இடத்துல எப்படி தனியா இருப்பே அபி? இந்த இடத்தைப் பார்த்தா எனக்கே ஒரு மாதிரியா இருக்கு.''

அபிநயா சிரித்தாள்.

''என்னைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க சபரி. நீங்க எங்கப்பாவுக்கு டெலிபோன் பண்ணப் போயிட்டா எனக்கு துணையாயிருக்கிறதுக்காக ஒருத்தரை கூட்டிட்டு வந்திருக்கேன்.''

சபரி முகம் மாறினான்.

''யார் வந்திருக்காங்க?''

''திருவாளர் பிஸ்டல்.'' - தன் தோளில் ஊசலாடிக் கொண்டிருந்த டம்பப்பையைப் பிரித்து அந்தச் சின்ன பிஸ்டலை எடுத்துக் காட்டினாள் அபிநயா.

''பயங்கரமான முன்னேற்பாடு.'' - சபரி புன்னகைத்தான்.

அபிநயா தன் கையிலிருந்த வாட்ச்சைப் பார்த்தாள்.

மணி ஆறு பத்து.

மேற்கு திசை காயம் பட்டுப்போய் ரத்தமாய் சிவந்திருந்தது.

''நீங்க புறப்படுங்க சபரி. அப்பா இந்நேரம் வீட்டுக்கு வந்திருப்பார். நீங்க போன் பண்ணினா கிடைப்பார்.''

''ம்.''

''குரலை கொஞ்சம் ஏற்ற இறக்கமா பேசுங்க.''

''ம்.''



''என்ன சபரி ஒரு மாதிரியாயிட்டீங்க.''

''பயம்மாயிருக்கு அபி.''

''பழையபடி முருங்கமரம் ஏறிட்டீங்களா?'' தன்னுடைய இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்து சபரியை முறைத்தாள் அபிநயா.

''சரி... சரி... போறேன் அபி.'' - நகர்ந்தான் சபரி.

''டெலிபோன் பூத்திலிருந்து பேசறப்போ ஜாக்றதை சபரி! பக்கத்துல எவனாவது ஆள் இருந்துடப் போறான். நல்லா பார்த்துகிட்டு பேசுங்க.''

''ம்.''

சபரி கோயிலை சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு திரும்பி ரோட்டை நோக்கி நடந்தான். இருட்டு வேகமாய் கவிய ஆரம்பித்தது.

## 6

சர்க்கரை இல்லாத காப்பியை சிரமமாய் உறிஞ்சிக் கொண்டிருந்த சந்தானகிருஷ்ணன் டெலிபோன் கூப்பிட்டதும் எழுந்து போய் ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ... சந்தான கிருஷ்ணன் ஹியர்''

''குட் மிஸ்டர் சந்தான கிருஷ்ணன்... நான் யார்ன்னு தெரிஞ்சுக்க நீங்க ஆர்வப்பட வேண்டாம்... ஒரு விஷயத்தை உங்ககிட்ட கன்வே பண்ணத்தான் போன் பண்ணினேன்.''

''என்ன சொல்லப் போறே...?''

''உங்க டாட்டர் அபிநயா வீட்ல இருக்காளா?''

''இல்லே, ஷாப்பிங் போயிருக்கா.''

''புவர் ஃபாதர்!''

''என்ன சொல்றே...?''

''அபிநயா ஷாப்பிங் போகலை சந்தான கிருஷ்ணன். இப்ப என்கிட்டத்தான் இருக்கா. என்னோட கஸ்டடியில தான் இருக்கா. அவ திரும்பவும் உங்களுக்கு மகளா வேணுமின்னா ஒரு பிஸினஸ் பேசிக்குவோமா...?''

''டேய்... யார்ரா... நீ...''

''உங்க மகளை கிட்நாப் பண்ணினவன் பேரையும் ஊரையும் சொல்லுவான்னு நீங்க

எதிர்பார்க்கலாமா சந்தான கிருஷ்ணன்?''

''அபிநயாவை ஒண்ணும் பண்ணிடாதே''

''இதுவரைக்கும் ஒண்ணும் பண்ணலை... பிசினெஸ் பேசிக்குவோமா...?''

''என்ன பிசினஸ்?''

''அபிநயாவுக்கு நான் ஒரு விலை வெச்சிருக்கேன்''

''விலையா....?''

''இந்த நிமிஷம் அவளோட விலை, பத்து லட்சம்''

''எ... என்ன சொல்றே...?''

''தமிழ்ல சொன்னா பத்து லட்சம். இங்கிலீஷ்ல்ல சொன்ன டென் லாக்ஸ். இந்தியில சொன்ன தஸ் லாக். நீங்க எந்த பாஷையில புரிஞ்சுகிட்டாலும் சரியே.''

சந்தான கிருஷ்ணன் தளர்ந்தார்.

மறுமுனைக் குரல் எகத்தாளமாய் கேட்டது. ''என்ன சந்தான கிருஷ்ணன்! விலை ரொம்ப ஜாஸ்தியா...?''

''பணம் தர்றேன்... அவளை ஒண்ணும் பண்ணிடாதே.''

''கேட்ட பணம் என் கைக்கு வந்தா உங்க மக சேதமில்லாமே வீட்டுக்கு வருவா. நீங்க பணம் தராமே என்னை ஏமாத்த நினைச்சாலோ... போலீசுக்குப் போனாலோ அபிநயா அசிங்கப்பட்டுப் போயிடுவா. ஏதாவது ஒரு குப்பைத் தொட்டில உடம்புல துணி இல்லாமே பொணமா கிடப்பா உங்க மக''

''டேய்... அப்படியெல்லாம் பண்ணிடாதே. நீ கேட்ட பணம் தர்றேன்.''

''போலீசுக்கு...?''

''போகமாட்டேன்.''

''குட்... நான் இப்ப சொல்றதை கவனிங்க. இப்போ மணி ஆறே முக்கால். சரியா எட்டு மணிக்கு பத்து லட்ச ரூபாயை ஒரு சூட்கேஸ்ல போட்டு மருதமலை போற ரோட்டுக்கு வாங்க. மருதமலை 5 கி.மீ.ன்னு ஒரு மைல்கல் ரோட்டுக்கு இடது பக்கமா தெரியும். அந்தக் கல்லை யொட்டின மாதிரி வாய்க்கால் தண்ணி போறதுக்



காக - ஒரு சின்ன பாலம் கட்டியிருக்காங்க. அந்த பாலத்துக்கு கீழே சூட்கேஸை வெச்சுட்டு வந்தவழியே நீங்க போயிடணும்.''

''அபிநயா?''

''தானே உங்க வீட்டுக்கு வந்துடுவா! அவ உங்க வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்னாடி போலீசுக்கு போனா மறுபடியும் நான் அபிநயா கூட விளையாட வேண்டியிருக்கும்.''

''நான் போலீஸ''க்குப் போகலை.''

''தட்ஸ் குட். சரியா எட்டு மணிக்கு பணத்தோடு வர்றீங்களா?

மறுபடியும் சொல்றேன் சந்தானகிருஷ்ணன்! பத்து லட்ச ரூபாயைக் காப்பாத்துறதுக்காக மகளை பலி குடுத்துடாதீங்க... நீங்க போலீசுக்கு போனா அடுத்த விநாடியே எங்களுக்கு விஷயம் தெரிஞ்சுடும். நீங்க பங்களாவுக்குள்ளே இருந்தாலும், உங்களோட ஒவ்வொரு அசைவையும், நாங்க 'நோட்' பண்ணிட்டுத்தான் இருக்கோம்.''

''பணத்தைக் கொண்டு வந்து தர்றேன்.''

''மருதமலை ரோடு. 5வது கி.மீ. கல். பாலம்.''

''ஞாபகமிருக்கு.''

மறுமுனையில் டெலிபோன் வாயைச் சாத்திக் கொண்டது.

சந்தான கிருஷ்ணன் முகத்தில் வருகின்ற வியர்வையைக் கூட துடைக்கத் தோன்றாமல் ரிஸீவரைப் பிடித்தபடி நின்றிருந்தார். வெறித்த பார்வை; நிமிஷங்கள் சுரத்தில்லாமல் நகர்ந்தன.

''நமஸ்காரம்.''

குரல் கேட்டு உணர்வுக்குத் திரும்பினார்.

புரோக்கர் சிவகுருநாதன் நின்றிருந்தார்.

ரிஸீவரை சாத்திவிட்டு சோபாவுக்குத் திரும்பினார் சந்தானகிருஷ்ணன். "நாளைக்கு சாயந்தரம் அஞ்சுமணிக்கு பெண்ணைப் பார்க்க வர்றாங்களாம்.''

சந்தானகிருஷ்ணனின் வயிற்றில் ஒரு திகில் சுழன்றது.

''எ... எ... எப்ப வர்றாங்க?''

''நாளைக்கு சாயந்தரம்.'' என்று சொன்ன

புரோக்கர் - சந்தான கிருஷ்ணனின் முகத்தைப் பார்த்து விட்டு - "ஏன் எப்படியோ - என்னமோ மாதிரி இருக்கீங்க?" என்று கேட்டார்.

எச்சில் விழுங்கினார் சந்தானகிருஷ்ணன்.

"ஒண்ணுமில்லை," சிவகுருநாதன். அபிநயாவுக்கு உடம்பு சுகமில்லை."

"அடடா... உடம்புக்கு என்ன?"

"காய்ச்சல்தான். இருந்தாலும் உடம்புக்கு அசௌகரியமா இருக்கிற நேரத்துல அவங்க பொண்ணைப் பார்க்க வரவேண்டாமேன்னு நினைக்கிறேன்."

"போன் பண்ணி அவங்களுக்கு தகவல் சொல்லிட்டா போச்சு."

"இப்பவே போன் செஞ்சு சொல்லிடும்."

சந்தானகிருஷ்ணன் டெலிபோனை நோக்கி கையைக் காட்ட - சிவகுருநாதன் எழுந்து போனார்.

## 7

ரிஸீவரைத் தொங்கப் போட்டு விட்டு டெலிபோன் பூத்தை விட்டு வெளியே வந்தான் சபரி. நெஞ்சுக் கூட்டில் யாரோ உட்கார்ந்து ட்ரம் வாசித்தார்கள்.

கணபதி பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த சிட்டி பஸ்ஸில் ஏறி மறுபடியும் சரவணம்பட்டிக்கு வந்த சபரி ரோட்டோரமாய் இறங்கி ஒற்றையடிப் பாதையை ஞாபகம் வைத்துக் கொண்டு பத்ரகாளியம்மன் கோயிலை நோக்கி நடந்தான்.

மணிக்கட்டை உயர்த்தி வாட்ச்சைப் பார்த்தான்.

மணி 6.50.

அபிநயா கோயிலில் தனியாய் இருப்பாள் என்ற எண்ணம் இருதயத்தை உசுப்ப - அந்த ஒற்றையடிப் பாதையில் வேகவேகமாய் நடந்தான்.

அபிநயாவின் தைரியம் அவனை அயர வைத்தது.

இந்த இருட்டில் -

அந்த பாழடைந்த கோயிலில் -

தனியாய் உட்கார்ந்திருக்க யாருக்குமே ஒரு அசுர தைரியம் வேண்டும்.



'அபிநயாவுக்கு இவ்வளவு தைரியம் எப்படி சாத்தியம்?' ஆச்சர்யப்பட்டு - யோசித்துக் கொண்டே நடந்தான் சபரி. இருட்டில் மசமச வென்று கோயிலின் கோபுரம் தெரிந்தது.

கோயிலை நெருங்கினான்.

அமைதி.

அந்த அமைதியை அறுத்துப் பார்க்க விரும்புகிற மாதிரி சில்வண்டொன்று 'ஜிர்ர்ர்' என்று கத்திக் கொண்டிருந்தது. காற்று வேகமாய் இருந்தது.

"அபி!"

குரல் கொடுத்தான்.

பதிலுக்கு நிசப்தம்.

"அபி...!"

மௌனம்

சபரியின் பின்னங்கழுத்தில் வியர்வை ஊறியது.

"அபி."

பெரிதாய் கத்திப் பார்த்தான்.

வௌவால் ஒன்று முகத்துக்கு நேராய் பறந்து வந்து பின் விருட்டென்று திரும்பிப் போனது. எங்கோ தொலைவில் ஒரு நாய் குரைக்கும் சத்தம் பலஹீனமாய் கேட்டது.

மெல்ல கோயிலைச் சுற்றி வந்தான்.

இருதயம் எம்பியது.

கோயிலின் மண்டபக் கோடி வரைக்கும் போய்விட்டு திரும்பினான். சுற்றும் முற்றும் பார்த்தபடி நடந்து வந்து கோயில் தூணுக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

அதே விநாடி -

மண்டபத் இட்டின் இருட்டிலிருந்து யாரோ குபீரென்று சபரியின் மேல் பாய்ந்தார்கள்.

மெத்தென்று ஒரு புஷ்ப மூட்டை மேலே வந்து விழுந்தது போன்ற உணர்வு.

சிரிப்பும் டார்ச் வெளிச்சமும் ஒரே நேரத்தில் பீறிட்டது.

அபிநயா நின்றிருந்தாள். சிரிப்போடு கேட்டாள். "பயந்துட்டீங்களா சபரி?"

சபரி விளையாட்டாய் அவளுடைய வயிற்றில் குத்தப் போனான். "இப்படித்தான் பயமுறுத்தறதா

அபி? கொஞ்ச நேரத்துல நான் வேர்த்து விறுவிறுத்து போயிட்டேன்."

"ஏன்தான் இப்படி பயப்படறீங்களோ... சரி போன விஷயம் என்னாச்சு?"

"உங்கப்பாகூட போன்ல பேசினேன்."

"விஷயத்தைக் கேட்டதும் ஆடிப் போயிருப்பாரே?"

"அரண்டு போயிட்டார். 'அபிநயாவை ஒன்னும் பண்ணிடாதே... ஒன்னும் பண்ணிடாதே'ன்னு கெஞ்சினார்"

"அதான் அப்பா."

"மருதமலை ரோட்டுக்கு வரச் சொல்லிட்டேன்."

"அடையாளம் சரியா சொன்னீங்களா?"

"ஒரு தடவைக்கு ரெண்டு தடவை சொல்லியிருக்கேன்."

"பணத்தை எடுக்க போகலாமா?"

"எப்படி போகலாம்?"

"டாக்ஸியில போய் வடவள்ளி இறங்கி - அங்கிருந்து நடந்து ஸ்பாட்டுக்கு போயிடலாம். சூட்கேஸ் கைக்கு வந்ததும் - மறுபடியும் நடந்து வந்து டாக்ஸி பிடிச்சுடலாம்."

"அபி."

"என்ன சபரி?"

"உங்கப்பா போலீஸுக்கு போயிட மாட்டாரே?"

"கண்டிப்பா போகமாட்டார்."

"எனக்கு உதறலாயிருக்கு..."

"உதறலாயிருந்தா, என் கையைப் பிடிச்சுகிட்டே நடந்து வாங்க! அய்யோ... சபரி... உங்களுக்கு ஆயிரம் வாட்டி தைரியம் சொல்லிட்டேன். ஏதாவது சிக்கல் வந்தா நான் உண்மையைச் சொல்லிவிடறேன் போதுமா?"

சபரி தயங்கி அவளைத் தொடர்ந்தான்.

## 8

சந்தானகிருஷ்ணன் தவிப்பான நிமிஷங்களில் இருந்தார்.

கம்பெனி மானேஜரை போனில் கூப்பிட்டார்.



"விஜயராகவன்!"

"எஸ்... ஸார்"

"கம்பெனியில் இப்போ கேஷ் எவ்வளவு இருக்கும்?"

"நாளைக்கு 'வேஜ் டே'ன்னு அஞ்சு லட்சம் ட்ரா பண்ணி வெச்சிருக்கேன் ஸார்... ஹெட் ஆபீஸ்ல ஒரு லட்சம் இருக்கும் ஸார்..."

"மொத்தம் ஆறு லட்சம் உங்க கையில இருக்கு?"

"ஆமா ஸார்..."

"அவ்வளவு பணத்தையும் ஒரு சூட்கேஸ்ல போட்டு இன்னும் அரைமணி நேரத்தில பங்களாவுக்கு கொண்டு வாங்க..."

"சரி... ஸார்"

"அப்படியே முல்தான்மல்லுக்கு போன் பண்ணி இன்னும் அரைமணி நேரத்துல நாலு லட்சம் கேஷா கிடைக்குமான்னு கேளுங்க..."

"பேங்க்ல பணம் இருக்கு ஸார்... நாளைக்கு காலைல நாம்பளே ட்ரா பண்ணிக்கலாம். இப்போ அநாவசியமா எதுக்காக முல்தான்மல்கிட்டே போகணும் ஸார்?"

"நான் சொன்னதை செய்யுங்க விஜயராகவன்."

"எஸ்... ஸார்"

"இன்னும் அரைமணி நேரத்துல எனக்கு ஹாட் கேஷ் டென் லாக்ஸ் வேணும். ஏற்பாடு பண்ணிக் கொண்டு வாங்க."

"கொண்டு வர்றேன் ஸார்..."

ரிஸிவரை வைத்துவிட்டு உட்கார்ந்தார் சந்தானகிருஷ்ணன். ஹால் கடிகாரம் ஏழே காலைக் காட்டிக் கொண்டு நின்றிருந்தது.

"அய்யா..."

முதுகுக்குப் பின்னால் குரல் கேட்க, திரும்பினார்.

சமையல் மணி நின்றிருந்தான்.

என்ன என்பது போல் பார்த்தார் சந்தானகிருஷ்ணன். அவன் ஓரடி முன்னால் வந்து சொன்னான். "அய்யா! சின்னம்மாவை இன்னும் காணோம். டிபன் பண்ணனும். அயிட்டம் என்னான்னு சொன்னா ப்ரிபேர் பண்ணிடுவேன்."

அவனுடைய கவலை அவனுக்கு.

நெற்றி வியர்வையை மேல் துண்டால் ஒற்றிக் கொண்டே சந்தானகிருஷ்ணன் அவனை ஏறிட்டார். ''அபிநயாவுக்கு ஒண்ணும் ப்ரிபேர் பண்ணாதே... அவ ஒரு கல்யாண ரிசப்ஷனுக்கு போயிருக்கா. எப்படியும் வர ராத்திரி பத்து மணியாயிடும்... நீ சாப்பிட்டுட்டு கிளம்பு.''

''அய்யா உங்களுக்கு...?''

''எனக்கும் ஒண்ணும் வேண்டாம்...''

மணி குழப்பமாய் நகர்ந்தான்.

சந்தான கிருஷ்ணன் மானேஜர் விஜயராகவனுக்காக காத்திருக்க ஆரம்பித்து நிமிஷங்களை போக்கிக் கொண்டிருந்தார்.

நேரம் 7.30ஐத் தொட்ட போது -

டெலிபோன் கூப்பிட்டது.

வேக வேகமாய் போய் ரிஸீவரை எடுத்தார்.

அதே குரல்.

''என்ன சந்தான கிருஷ்ணன், கேஷ் அரேஞ்ச் பண்ணிட்டீங்களா...? இன்னும் அரை மணி நேரந்தான் இருக்கு.''

''நீ கேட்ட பணம் தர்றேன். அபிநயாவை ஒண்ணும் பண்ணிடாதே!''

''ஒண்ணும் பண்ணிட மாட்டேன்.'' - சிரித்தது குரல்.

''அபிநயா இப்ப எங்கே இருக்கா?''

''அதெல்லாம் உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை சந்தான கிருஷ்ணன். நான் கேட்ட பணம் என்கைக்கு வந்ததும் உங்க மக அபிநயா கொஞ்சம் கூட சேதமில்லாமே வந்து சேருவா.''

''அபிநயா உன்கிட்டதான் இருக்கான்னு நான் எப்படி நம்பி பணத்தைத் தர்றது?''

''புத்திசாலித்தனமான கேள்வி. அபிநயாவை பேசச் சொல்றேன். கேட்கறீங்களா சந்தான கிருஷ்ணன்?''

''பேசச்சொல்லு... பேசச்சொல்லு''

பரபரத்தார்.

பதினைந்து விநாடி மௌனம்.

பிறகு ஒரு மெல்லிய விசும்பலோடு அபிநயா குரல் கொடுத்தாள்.



''அ...ப்...பா...''

''பயப்படாதேம்மா, நான் இப்ப புறப்பட்டு வர்றேன்'' - சந்தான கிருஷ்ணன் பேசப் பேச ஆண்குரல் உள்ளே புகுந்தது. அபிநயாவின் குரலை வெட்டியது.

''இப்ப நம்பறீங்களா சந்தான கிருஷ்ணன் - அபிநயா என்கிட்டதான் இருக்காங்கிறதை?''

''நீ கேட்ட பணத்தை குடுத்துடறேன்! அபிநயா எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவா? நீ ஏதாவது ஒரு இடத்தைச் சொன்னா நான் காரோடு போய் அவளை பிக்-அப் பண்ணிக்கறேன்.''

''அந்த சிரமமெல்லாம் உங்களுக்குவேண்டாம் சந்தான கிருஷ்ணன். பணம் என் கைக்கு வந்ததும் சரி பார்த்துகிட்டு நானே உங்க மகளைப் பத்திரமா அனுப்பிச்சு வெக்கறேன். எப்படியும் ஒன்பது மணிக்குள்ளே அபிநயா வந்துடுவா.''

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டது.

அதே விநாடி -

பங்களா வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

சந்தான கிருஷ்ணன் திரும்பிப் பார்த்தார்.

கம்பெனி மானேஜர் விஜயராகவன் ஒரு சூட்கேஸோடு காரினின்றும் இறங்கிக் கொண்டிருந்தார்.

அவரை நோக்கி வேகமாய் போனார்.

''என்ன விஜயராகவன்! கேஷ் அரேஞ்ச் பண்ணிட்டீங்களா?''

''பண்ணிட்டேன் ஸார்''

''முல்தான்மல் கொடுத்தாரா?''

''அவர்கிட்ட கேஷ் இல்ல ஸார், வேற இடத்துல அரேஞ்ச் பண்ணிக் குடுத்தார்.''

''நாளைக் காலைல முதல் காரியமா பேங்க்ல கேஷ் ட்ரா பண்ணிக் குடுத்துடுங்க.''

''சரி ஸார்.''

விஜயராகவனிடமிருந்து சூட்கேஸை வாங்கிக் கொண்டார் சந்தான கிருஷ்ணன். ''அகௌண்ட் சரியா இருக்கான்னு எண்ணிப் பார்த்துட்டீங்களா..?''

''பார்த்துட்டேன் ஸார்...''

**நே**ரம் 7.45.

மருதமலை போகும் ரோடு - நட்சத்திரங்களின் சோகையான வெளிச்சத்தில் நிசப்தமாய் படுத்திருந்தது, தொலைவில் மருதமலை மலைகளுக்கு நடுவே ஒரு வெளிச்சம் ஆரமாய் தெரிந்தது. ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் கிலோ மீட்டர் கணக்கில் பாறை பரப்புகள் பரவியிருக்க - ஒரு வசதியான பாறைக்கும் பின்னால் - பிஸ்கெட் பாக்கெட்டை உடைத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள் சபரியும், அபிநயாவும்.

''உங்கப்பா இப்போ வந்திட்டிருப்பார்.''

''சரியா எட்டு மணிதானே சொன்னீங்க...?''

''ஆமா...''

''பாவம் அப்பா. அரண்டு போயிருப்பார்.''

''ஒருமணி நேரம் கழிஞ்சா - சந்தோஷமாயிடுவார்... பிஸ்கெட்டை எடுத்துக்க அபிநயா. பசிக்குதுன்னு சொன்னே...''

பாக்கெட்டுக்குள் கையை விட்டு ஒரு பிஸ்கெட்டை உருவிக் கொண்டாள் அபிநயா. பார்வை தொலைவில் தெரிந்த ரோட்டுப் பக்கம் ஓடியது.

போக்குவரத்து இல்லாத ரோடு அமைதியாய் தெரிந்தது.

எப்போதோ ஒரு சைக்கிள் மட்டும் டைனமோ வெளிச்சத்தோடு தத்தித் தத்திப் போய் மறைந்தது. ரொம்பத் தொலைவில் இருந்த கிராமங்களில் வெளிச்சப் பொட்டுகள் தெரிந்தன.

இருவரும் மௌனமாய் பிஸ்கெட்டுகளைக் கொறித்துக் கொண்டிருக்க -

நேரம் நகர்ந்தது.

7:50.

7:51.

7:52.

''அபி.''

''ம்...'' - ரோட்டின் மேலிருந்த பார்வையை விலக்கிக் கொள்ளாமல் 'உம்' கொட்டினாள் அபிநயா.



''ஒரு வேளை... உங்கப்பா போலீஸோடு வந்துட்டா நீதான் நிலைமையைச் சமாளிக்கணும்.''

''அதுக்கெல்லாம் அவசியமே வராது.''

7:54.

7:55.

''அஞ்சு நிமிஷந்தான் இருக்கு.

காத்திருந்தார்கள்.

''கார் எந்த நிமிஷமும் வரலாம்.''

''இன்னும் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்துக்க அபி. ரோட்டோட ஃபுல் வ்யூவும் துல்லியமா தெரியும்.''

7:56

7:57

திடீரென்று அபிநயா மெலிதாய் சந்தோஷக் கத்து கத்தினாள்.

''சபரி... கார் வருது...''

ஹெட் லைட்டுகளினின்றும் பீறிட்ட வெளிச்சப்பட்டைகள் ரோட்டை அடையாளம் காட்ட - கார் வேகத்தோடு வந்து கொண்டிருந்தது.

''உங்கப்பா கார்தானா அபி...?''

''இருட்டுல சரியா தெரியலை... அப்பாவோட கார் மாதிரி தான் தெரியுது...''

''ஏகப்பட்ட வேகத்துல வர்றார்.''

இருவரும் காரையே பார்த்துக் கொண்டிருக்க, அது கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் குறைந்து அந்த சின்ன பாலத்துக்கு அருகே வந்ததும் நின்றது.

காரின் ஹெட்லைட்டுகள் அணைக்கப்பட, யாரோ நிழலுருவமாய் பெட்டியோடு இறங்கினார்கள். டார்ச் வெளிச்சத்தோடு நடந்து பாலத்துக்கு கீழே போனார்கள். சில விநாடிகள் கழித்து மேலே வரும் போது சூட்கேஸ் 'ஆப்சென்ட்' ஆகியிருந்தது.

''அப்பாதான்'' என்றாள் அபிநயா.

கார் ரிவர்ஸில் திரும்பி வந்த வழியே போக ஆரம்பித்தது.

''அபி! சொன்னபடியே செய்யறார் உங்கப்பா!''

''சபரி...''.

''ம்...''

''நீங்க போய் சூட்கேஸை எடுத்துட்டு

வந்துருங்க...''

''இப்பவேவா...?''

''ம்.''

வெப்பு விளக்குகளோடு போய் கொண்டிருந்த காரையே பார்த்தான் சபரி.

''பத்திரம் சபரி...''

அபிநயா கிசுகிசுப்பாய் கத்தினாள்.

சபரி இருட்டில் கையசைத்துக் கொண்டே நடந்தான்.

அபிநயா பாறையில் இடம் மாறி உட்கார்ந்து - இருட்டில் லேசான அசைவுகளோடு நடந்து போகும் சபரியையே உன்னிப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஐம்பது சதவீத திகிலும், ஐம்பது சதவீத சந்தோஷமும் சரிசமமாய் கலந்து ரத்தத்தில் ஓடின. அபிநயா கலவரமாய் மூச்சு விட்டாள்.

'இந்த நிமிஷம் வரைக்கும் எல்லாமே துல்லியமாய் - சரியாய் நடந்திருக்கிறது. பாவம் அப்பாதான் துடித்துப்போயிருப்பார்.'

'ஸாரி... டாடி...!'

உதட்டுக்குள் முனகி - நெஞ்சில் கைவைத்து மானசீகமாய் சந்தான கிருஷ்ணனிடம் மன்னிப்பு கேட்டாள் அபிநயா.

## 9

**கா**த்திருக்க ஆரம்பித்து பதினைந்து நிமிஷம் வரைக்கும் கவலைப்படாமல் இருந்த அபிநயா பதனாறாவது நிமிஷத்தின் துவக்கத்திலிருந்து கவலைப்பட்டாள்.

உட்கார்ந்திருந்த பாறையினின்றும் கீழே இறங்கி - தவிப்போடு இரண்டு நிமிஷம் உலவி - மறுபடியும் அதே தவிப்போடு பாறையின் மேல் ஏறி உட்கார்ந்தாள்.

மணிக்கட்டை உயர்த்தி ரேடியம் மின்னும் வாட்சைப் பார்த்தாள்.

மணி 8:20.

நிர்மலமாய் இருந்த வானத்தில் நட்சத்திரங்கள் கோஷ்டி சேர்த்துக் கொண்டு மின்ன - அரைவட்ட



அஷ்டமி சந்திரன் கோபப்பட்ட திலுசில் தனியாய் ஒதுங்கியிருந்தான்...

காற்று சில்லென்று பொட்டல் வெளி பூராவும் வேகமாய் அலைந்தது.

'ப்ரீப் கேஸை எடுக்க இவ்வளவு நேரமா...?'

'என்னதான் செய்கிறார் சபரி...?'

'போய் பார்க்கலாமா...?'

'பொறு... ஒரு அஞ்சு நிமிஷம் பொறு... சபரி இப்போ வந்துடுவார்' - மனசுக்குள்ளிருந்து இன்னொரு அபிநயா சொன்னாள்.

அந்த ஐந்து நிமிஷமும் நகர்ந்தது.

அபிநயா வியர்க்க ஆரம்பித்து பாறையினின்றும் இறங்கினாள்.

அதே விநாடி -

பாறையின் இடதுபக்க மறைவிலிருந்து யாரோ இருமினார்கள். ஒரு ஆணின் இருமல்.

உடம்பு பூராவும் உருகிவிட்ட மாதிரி அதிர்ந்தாள் அபிநயா.

படக்கென்று திரும்பினாள்.

பாறையின் மறைவிலிருந்து கையில் லாந்தர் விளக்கோடு யாரோ வெளிப்பட்டார்கள். உடம்பில் சால்வை, தலையில் முண்டாசு. இடது கையில் ஒரு நீண்ட கம்பு.

''யாரது...?'' - குரல் கரகரப்பாய் கேட்டுக் கொண்டே அபிநயாவை நெருங்கியது.

அபிநயா அசையாமல் நின்றாள்.

லாந்தர் விளக்கு அவனுடைய முகத்துக்கு நேரே வந்தது.

''அட... பொண்ணு! ஏம்மா இந்த நேரத்துல இங்கே நிக்கறே? காத்து கருப்பு உலாவற நேரம். வூட்டுக்கு போம்மா..''

அபிநயா அப்போதுதான் அந்த ஆணின் முகத்தைக் கவனித்தாள். நடுத்தர வயது. முகத்தில் கிராமியத்தனம். தொங்கலான மீசை.

அபிநயா பயத்தில் திக்கினாள்.

''ரோ...ரோ... ரோட்டுக்குப் போற வழி தெரியலை.''

''இப்படியே நேரா போம்மா. அரகல்லு தூரம் போனா ரோடு வரும். வயசுப் பொண்ணு

கொஞ்சம் கூட பயமில்லாமே இப்படி இருட்டுல நின்னுட்டிருக்கியேம்மா. படிச்ச பொண்ணுகளுக்கு தகிரியம் ஜாஸ்திதான்.''

அந்த மனிதர் பேசப்பேச -

அபிநயா நகர்ந்தாள்.

''நேரே போம்மா.'' - சொல்லிக் கொண்டே லாந்தர் விளக்கோடு பாறையின் அந்தப் பக்கமாய் போனவர், ''ப்பா...பா...பா... சனியன் பிடிச்ச குட்டி, வாரத்துக்கு ரெண்டு தபா இப்படி காணாமே போயிடுது. இந்த இருட்டுல எப்படி போய் தேடுறது.?'' - சலித்துக் கொண்டார்.

அபிநயா பார்வையில் இருட்டை விலக்கிக் கொண்டே நடந்தாள்.

'சபரி...என்னாச்சு... ஏன் இவ்வளவு நேரம்? என்ன பண்றீங்க?'

'ப்ரீப்கேஸை கொண்டுட்டு வர்றதுல என்ன ப்ராப்ளம்?' - கேள்விகளை மனசுக்குள் எழுப்பிக் கொண்டு கெட்டித்துப் போன தரையில் ஏற்ற இறக்கங்கள் பார்த்து வேகமாய் நடந்தாள்.

சில நிமிஷ நடை.

ரோட்டைத் தொட்டாள்.

ரோட்டுப் பிரதேசத்தில் மனித சஞ்சாரம் இல்லை.

கனமான நிசப்தம்.

நிலாவும் நட்சத்திரங்களும் கொட்டிய மங்கலான வெளிச்சத்தில் மருதமலை போகும் ரோடு கறுப்பு நாடாவாய் தெரிய 5-வது கி.மீ. கல்லைத் தேடினாள்.

இருபதடி தூரத்தில் கிடைத்தது.

அருகே பாலம் தெரிந்தது.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு அபிநயா அந்த சரிவான பகுதியில் இறங்கினாள்.

அடித்தொண்டையிலிருந்து கிசுகிசுப்பாய் குரல் கொடுத்தாள்.

''சபரி.. சபரி..''

காற்று 'ஸ் ஸ் ஸ்' என்றது.

''சபரி...'

நிசப்தம்.

பாலத்துக்குக் கீழே குனிந்து பார்த்தாள்.



பாலத்துக்குக் கீழே...

எந்த அசைவும் இல்லை.

'சபரி, நீங்க எங்கே போனீங்க?' மனசுக்குள்ளே பொருமிக் கொண்டே பாலத்திற்கு அடியில் குனிந்து நடந்தாள்.

தண்ணீர் பாயாத தரைப் பரப்பில் கல்லும் மண்ணும் கால்களை நெருடின. பாலத்திற்கு கீழே இருந்த காற்று நாறியது. பார்த்தீனிய புதர்க்குப் பின்னால் எதுவோ ஓடியது.

மூக்கைப் பொத்திக் கொண்டு -

இன்னமும் உள்ளே போனாள்.

இடது கால் சட்டென்று எதன் மீதோ மோதிக் கொள்ள, நின்றாள்.

பார்வையைக் கீழே போட்டாள்.

சபரி மெல்லிய இருட்டில் மல்லாக்காக விழுந்திருந்தான்.

செத்திருந்தான்.

## 10

அபிநயாவின் இதயம் ஸ்தம்பித்தது.

''சபரீ...ஈ.ஈ.ஈ.''

நடுங்கிக் கொண்டே மண்டியிட்டு உட்கார்ந்தாள். சபரியின் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்க - உள்ளங்கை பூராவும் பிசுபிசுப்பாய் எதுவோ ஒட்டிக் கொள்ள - கண்களைத் தாழ்த்தி உற்றுப் பார்த்தாள்.

''சபரி...''

பதட்டத்தோடு உசுப்பினாள்.

சபரியின் உடல் சலனமில்லாமல் ஆடியது.

அபிநயா பீறிட்டு எழுகின்ற அழுகையோடு சுற்றும் முற்றும் பார்த்தாள். அந்த ப்ரீப்கேஸ் எங்கேயாவது தட்டுப் படுகிறதாவென்று கண்களைச் சுழற்றினாள்.

ப்ரீப்கேஸைக் காணோம்.

'யார் வந்திருப்பார்கள்?'

'எனக்கும் சபரிக்கும் தெரிந்த இந்த கடத்தல் நாடகம் வேறு யார்க்கோ தெரிந்து ஃபாலோ பண்ணியிருக்கிறார்கள். சபரியை பணத்துக்காகத் தீர்த்திருக்கிறார்கள்.'

கண்களில் நீர் திரற -
மறுபடியும் சபரியைப் பார்த்தாள்.

''வேண்டாம் அபிநயா. விளையாட்டு வினையாயிடும். இது விளையாட்டு காரியமில்லை.'' - சபரி சொன்ன வார்த்தைகள் மனசைக் கீறி காயப்படுத்தியது.

அபிநயா எழுந்தாள்.

அதே விநாடி-

யாரோ நடந்துவரும் சத்தம்.

'க்ரக். க்ரக். க்ரக்.'

அபிநயா திரும்பிப் பார்ப்பதற்குள் - யாரோ குபீரென்று அவள் மீது பாய்ந்து வாயைப் பொத்தினார்கள். ஈரமான கர்ச்சிப் மருந்து நெடியோடு நாசிப் பரப்பை அடைத்தது-

அபிநயா திமிற முயற்சித்து -

முடியாமல் சோர்ந்தாள்.

கண்களுக்குள் இருட்டொன்று கரும் மேகமாய் வந்து உட்கார - உடம்பு காற்றில் மிதந்தது. சில நிமிஷப் போராட்டத்திற்குப் பின் - அப்படியே தண்ணீரில் நனைந்த காகிதமாய் துவண்டு

சரிந்தாள்.

நீளமான மயக்கத்திற்குள் போனாள்.

அவளைத் தூக்கி தன் புஜத்தின் மேல் போட்டுக் கொண்ட அந்த உருவம் பாலத்தை விட்டு வெளியே வந்து வேகமாய் நடந்து - மரத்தடியில் நிறுத்தி வைத்திருந்த டெம்போ வேனை நோக்கிப் போனது.

வேனின் பின் சீட்டில் கிடத்திவிட்டு -

டிரைவிங் சீட்டில் உட்கார்ந்தது.

அடுத்த விநாடி - டெம்போ வேன் வேகமான வீறிடலோடு கிளம்பியது.

## 11

**தோ**ள்பட்டையில் சுருக்கென்று இஞ்செக்ஷன் குத்தப்படும் உணர்வு மூளைப் பிரதேசத்துக்கு உறைக்க - கண் மலர்ந்தாள் அபிநயா.

ஜன்னல்களிலிருந்து பீறிட்ட வெளிச்சம் அறை முழுவதும் பரவியிருக்க - கண்கள் கூசியது. சிரமப்பட்டு இமைகளைப் பிரித்தாள்.



குடும்ப டாக்டர் மேனன் ஸிரிஞ்சில் தீவிரமாய் மருந்தை ஏற்றிக் கொண்டிருந்தார். சந்தான கிருஷ்ணன் மோவாயில் கைதாங்கி நாற்காலியில் சாய்ந்திருந்தார். அபிநயா கண் விழிப்பதைக் கண்டதும் சந்தோஷமாய் எழுந்து குனிந்தார்.

''அம்மா அபிநயா...!'' - அவள் தலையை வருடினார்.

''அ... அப்பா.''

''அப்படியே படும்மா. ஒண்ணும் ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே.'' - சந்தான கிருஷ்ணன் சொல்லச் சொல்ல டாக்டர் மேனன் அபிநயாவின் வலது பக்கத் தோள்பட்டையை பற்றி இஞ்செக்ஷனை செலுத்தினார். புன்னகைத்தார் அவளைப் பார்த்து.

''ஒண்ணும் பயப்படாதேம்மா... மயக்க மருந்தை சுவாசிச்சதாலே ஏற்பட்ட மயக்கம்.. பத்து நிமிஷத்துல போயிடும்...'' - இஞ்செக்ஷனை செலுத்தி விட்டு தன் கிட்டை எடுத்துக் கொண்டார் மேனன். ''அபிநயாவுக்கு குடிக்கிறதுக்கு ஏதாவது ட்ரிங்ஸ் தரலாம் சந்தான கிருஷ்ணன். நான் மறுபடியும் சாயந்திரம் வந்து பார்க்கிறேன்.''

சந்தான கிருஷ்ணன் தலையசைக்க டாக்டர் புறப்பட்டார். அவர் புறப்பட்டு கார் போர்டிகோவிலிருந்து நகரும்வரை காத்திருந்த சந்தான கிருஷ்ணன் திரும்பி அபிநயாவிடம் கேட்டார்.

''உன்னை அந்த பாவி எங்கேம்மா அடைச்சி வச்சிருந்தான்?''

''அ...அ...அப்பா''

கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது அபிநயாவுக்கு. பேச முடியாமல் திணறி கண்களை மூடிக்கொண்டாள். சில விநாடிகளுக்குப் பின் உதடுகளை பலஹீனமாய் அசைத்தாள்.

''அப்பா, நான் எப்படி வீட்டுக்கு வந்தேன்?''

''நம்ம பங்களா காம்பௌண்ட் வாசல்ல மயக்கமா நீ விழுந்து கிடந்தேம்மா! தோட்டக்கார பாலுசாமிதான் மொதல்ல உன்னைப் பார்த்துட்டு வந்து சொன்னான். ராத்திரியிலிருந்து உனக்கு மயக்கம் தெளியவே இல்லை.''

''அ... அப்பா.''

''அம்மா, அபிநயா! உன்னைக் கடத்திக்கிட்டு போன ரெண்டு பேர்ல ஒருத்தன் இன்னொருத்தனைக் கொலை செஞ்சுட்டு பணத்தோட தலைமறைவாயிட்டான் போலிருக்கு.''

''ரெண்டு பேரா?''

அபிநயா அதிர்ந்தாள்.

''அப்பா!''

''என்னம்மா?''

அழுகிற குரலில் சொன்னாள்: ''என்னைக் கடத்தியது ரெண்டு பேரில்லை. ஒருத்தர்தான். அதுவும் நிஜமான கடத்தல் இல்லை.''

முகம் மாறினார் சந்தான கிருஷ்ணன்.

''என்னம்மா சொல்றே?''

''அப்பா! இது நானும் சபரியும் விளையாட்டாய் போட்ட திட்டம்''

''சபரியா?''

அபிநயா வெடிக்கிற அழுகையோடும், விம்மலோடும் எல்லாவற்றையும் சொல்லி முடித்தாள். சொல்லிவிட்டு முழங்காலில் முகம் புதைத்து முதுகு குலுங்கினாள்.

சந்தான கிருஷ்ணன் அபிநயாவையே வெறித்தார்.

''படிச்ச பொண்ணு நீ என்ன காரியத்தையம்மா பண்ணியிருக்கே? எனக்கு வரப்போற மாப்பிள்ளைக்கு பத்துலட்ச ரூபா சொத்து இருக்கணும்னு நான் கண்டிஷன் போட்டது அந்த புரோக்கர் சிவகுருநாதனுக்காகம்மா! அந்த கண்டிஷனைப் போட்டாத்தான் அந்த புரோக்கர் கொஞ்சம் ஒழுங்கான வரனைப் பார்ப்பான். நீ அந்த சபரியை விரும்பற விஷயம் எனக்குத் தெரிஞ்சிருந்தா இந்நேரம் கல்யாணத்தை முடிச்சு வெச்சிருப்பேனே. பைத்தியக்காரத்தனமா திட்டம் போட்டு உன்னோட வாழ்க்கையையே பாழ் பண்ணிகிட்டியேம்மா'' - தலையில் அறைந்து கொண்டார் சந்தான கிருஷ்ணன்.

''அ...அப்பா!''

''சபரி கொலையான செய்தி இன்னிக்கு பேப்பர்ல வந்திருக்கம்மா. ஏன் எதுக்காக இந்த



கொலைன்னு யார்க்கும் தெரியாது. போலீஸும் திணறிட்டிருக்காங்க! 5-வது கி.மீ. கல் பாலத்துக்கு கீழே பிணம்னு நியூஸ் படிச்சதுமே உன்னைக் கடத்திகிட்டு போன ஆசாமியாத்தான் இருக்கணும்னு நினைச்சேன். போலீஸ்ல போய் சொல்லலாமான்னு யோசிச்சேன். போலீஸ்ல போய் சொன்னா அநாவசியமா உன்னோட பேர் தெருவுக்கு வரும். பின்னாடி நடக்கப்போகிற ஒரு நல்ல காரியத்துக்கு அது இடைஞ்சலாயிடும்னு நினைச்சுத்தான் பேசாமே இருந்துட்டேன்.''

''என்னோட சபரியை நானே அநியாயத்துக்கு கூட்டிகிட்டு போய் சாகடிச்சுட்டேன்ம்பா! அவர் அந்த கடத்தல் திட்டம் வேண்டாம்னு எவ்வளவோ தடவை சொன்னாரப்பா! என்னோட திமிர்த்தனம், நான்தான் கேக்கலை.''

சொல்லிவிட்டு அழுகையை மறுபடியும் புதுப்பித்துக் கொண்டாள் அபிநயா. கேவல்களும், விம்மல்களுமாய் ஐந்து நிமிஷம் ஓடியது.

சந்தான கிருஷ்ணன் நாற்காலியை விட்டு எழுந்து வந்து - அபிநயாவுக்கு அருகே கட்டிலில் உட்கார்ந்தார்.

''இதோ பார் அபிநயா.. இனிமேத்தான் நீ ஜாக்ரதையா இருக்கணும். நீயும் சபரியும் விளையாட்டாய் போட்ட திட்டம் யார்க்கோ தெரிஞ்சிருக்கு. அவங்க உங்களுக்கு தெரியாமே ஃபாலோ பண்ணி நான் பணப்பெட்டியைக் கொண்டு போய் போட்டதும் - சபரி வந்து எடுக்கிறதுக்கு முன்னாடி - அவங்க எடுத்திருக்காங்க; தடுத்த சபரியைக் கொன்னிருக்காங்க. நீயோ சபரியோ இந்த திட்டத்தை வேற யார்கிட்டேயாவது சொன்னீங்களா?''

''இ...இல்லேப்பா...''

''நீ இல்லேன்னு சொன்னா எப்படிம்மா...? விஷயம் எப்படியோ கசிஞ்சு யார் காதுக்கோ போயிருக்கு... சபரி தன்னோட ப்ரண்ட்ஸ் யார்கிட்டயாவது சொல்லியிருக்கலாம்.''

''அவர் அப்படி சொல்லக்கூடியவர் இல்லேப்பா...''

''அபிநயா! நடந்த சம்பவம் ரொம்பவும்

மோசமான சம்பவம். இதுல நீ சம்பந்தப்பட்டிருக்கிற விஷயம் வெளியே தெரிஞ்சா அந்த அவமானம் என்னிக்குமே நின்னுடும். நீ ஒருத்தனால கடத்தப்பட்டிருக்கேங்கிற விஷயம் உன்னைக் கட்டிக்கப்போற மாப்பிள்ளைக்கு தெரிஞ்சா - அது அவனோட மனசுல ஏகப்பட்ட சந்தேகங்களைக் கிளப்பும்.''

''இனிமே எனக்கு கல்யாணமா?'' - அபிநயா அழுகையோடு புன்னகைத்தாள். ''இருதயம் மினிஸ்டர் போஸ்ட் இல்லேப்பா - நினைச்சவங்களை எடுத்து அதுல உட்கார வெக்கறதுக்கு.''

சந்தான கிருஷ்ணன் கண்கள் கலங்க மகளையே பார்த்தார்.

## 12

மருதமலை போகும் ரோடு.

5-வது கி.மீ. கல் அருகே போலீஸ் ஜீப் நின்றிருந்தது. இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத்தும், சப்-இன்ஸ்பெக்டர் கதிரேசனும் பாலத்துக்கு கீழே நின்றிருந்தார்கள். காலை எட்டு மணி வெய்யில் பிடரியை லேசாய் வெம்மைப்படுத்த - அதைப் பொருட்படுத்தாமல் ஜனங்கள் சின்னச் சின்ன கும்பல் போட்டு திட்டு திட்டாய் நின்றார்கள்.

சபரியின் கால்கள் வெள்ளை விரிப்பையும் மீறி வெளியே நீட்டிக்கொண்டிருக்க - ஈக்கள் 'ஜோ'வென்று மொய்த்தது. மார்பில் உறைந்துபோன ரத்தம் கருஞ்சிவப்பில் தெரிந்தது. போட்டோகிராபரும், ஃபிங்கர் பிரிண்ட்ஸ் எடுப்பவரும் தத்தம் வேலைகளை முடித்துக் கொண்டு சிகரெட் புகைகளோடு ஒதுங்கியிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் தன்னுடைய தொப்பியைக் கழற்றி கக்கத்தில் வைத்துக் கொண்டு வழுக்கைத் தலையைக் கீறிக் கொண்டார். முப்பது வருஷ போலீஸ் அனுபவம் கண்களில் தெரிந்தது. அடுத்த வார இறுதியில் ரிடையர்மெண்ட் வாங்கப்போகும் அவர் இந்த சபரி கேஸை தொட ஆரம்பித்தார்.



''கான்ஸ்டபிள்!''

''ஸார்...!''

மார்க்கவரி வேனுக்காக காத்திருந்த கான்ஸ்டபிள் ஒருவர் வேக வேகமாய் ஓடி வந்தார். கன்னைய பிரசாத் கேட்டார்.

''பாடியை யார் மேன் மொதல்ல பார்த்தது?''

''அதோ... அந்த ஆள் தான் ஸார்''

கன்னைய பிரசாத் திரும்பிப் பார்த்தார்.

தலையில் முண்டாசுக் கட்டோடும் - உடம்பு பூராவும் போர்த்துக் கொண்ட போர்வையோடும் அந்த ஆள் மரத்தடியில் நின்றிருந்தான்.

''கூப்பிடு மேன் அந்தாளை''

கான்ஸ்டபிள் கையசைத்து அந்தாளைக் கூப்பிட, அவன் ஓடி வந்தான். கன்னைய பிரசாத் அவனைக் கையாள ஆரம்பித்தார்.

''பொணத்தை நீதான் மொதல்ல பார்த்தியா?''

''ஆமாங்க.''

''உம்பேர்?''

''மாதய்யனுங்க.''

''பாலத்துக்குக் கீழே கிடந்த பொணம் உன்னோட கண்ணுல எப்படி பட்டது?''

''அந்தக் கூத்தை ஏன் கேக்கறீங்க... இன்ஸ்பெக்டரய்யா? நா ஒரு ஆடு மேய்க்கிற இடையனுங்க. நூத்தி சொச்ச ஆடு நம்ம பட்டியில இருக்குங்க... நேத்திக்கு ராவு ஆட்டுக்குட்டி ஒண்ணு பட்டியிலிருந்து தாறவுந்து போச்சுங்க... அத தேடிகிட்டு - லாந்தர் வௌக்கை கையில் எடுத்துட்டு, ராத்திரி பத்து மணிவரிக்கும் அலைஞ்சேனுங்க. குட்டி ஆப்படலைங்க. கடைசியில இப்படி ரோட்டோரமா வந்து பாலத்துக்கடியில 'ப்பா..பா..பா''...ன்னு சத்தம் குடுத்துகிட்டே குனிஞ்சு பார்த்தனுங்க... யாரோ உள்ளார விழுந்து கிடந்தாங்க. வௌக்கை கிட்டக்க கொண்டாந்து பார்த்தேனுங்க. ரத்தத்துல விழுந்து கிடந்த ஆளைப் பார்த்ததும் இது முடிஞ்சுபோன சமாச்சாரம்ன்னு நெனைச்சு வடவள்ளி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயி தகவல் சொன்னேனுங்க.''

கன்னைய பிரசாத் கக்கத்திலிருந்த தொப்பியை மறுபடியும் தலைக்கு கொடுத்துவிட்டு

மாதய்யனை தீவிரமாய் பார்த்தார். பிறகு கேட்டார்.

''நீ பாலத்தை விட்டு வெளியே வர்றப்போ ரோட்ல வேற யாரையாவது பார்த்தியா? கார் ஏதாவது நின்னுட்டிருந்ததா?''

''ரோட்ல வெச்சு நா..யாரையும் பார்க்கல்லீங்க. ஆனா..நா காரையும் நா பார்க்கல்லீங்க. ஆனா..நா பொணத்தை பாக்கிறதுக்கு முன்னாடி அதோ அந்த கள்ளிப்பாறைக்கு பக்கத்துலே ஒரு பட்டணத்து பொண்ணு நின்னுகிட்டிருந்துச்சுங்க.''

கன்னைய பிரசாத்தின் போலீஸ் ரத்தம் சுறுசுறுப்பானது.

''பொண்ணா?''

''ஆமாங்க...''

''எங்கே நின்னுட்டிருந்தா?''

''அதோ அந்த கள்ளிப்பாறைக்குப் பக்கத்துலே...''

''எத்தனை மணிக்கு அந்தப் பொண்ணைப் பார்த்தே?''

''எட்டரை மணி இருக்குமுங்க.. 'காத்து கறுப்பு உலாவுற நேரத்துல - இங்க ஏன் நின்னுட்டிருக்கே'ன்னு சொல்லி நான் தான் விரட்டி உட்டேன்.''

''பொண்ணு எப்படி யிருந்தா?''

''லாந்தர் வெளிச்சம் கம்மியா இருந்ததாலே அந்தப் பொண்ணோட மூஞ்சிய சரியா பார்க்க முடியல்லீங்க...''

''அந்த பொண்ணு எந்தப்பக்கம் போனான்னு பார்த்தியா?''

''ரோட்டுப் பக்கமாத்தான் போனாங்க!''

கன்னைய பிரசாத் சப் -இன்ஸ்பெக்டர் கதிரேசனிடம் திரும்பினார். ''ஏ..லேடி இன்வால்வ்ட்....''

''மே...பி...ஸார்''

''வா..மேன் இங்கே....!''

''ஸார்...''

''பிரஸ்ஸுக்கு நியூஸ் கொடுத்தது யாரு?''

''நாங்க யாரும் தரலை ஸார்''

''நீங்க நியூஸ் தராமே 'தினஜோதி' பேப்பர்ல எப்படி அந்த மர்டர் நியூஸை போட்டான்?



போட்டோவோட கொட்டை எழுத்துல போட்டிருக்கான்...மேன்''

''வடவள்ளி போலீஸ் ஸ்டேஷன்ல ஒரு கேஸ் ரிப்போர்ட்டுக்காக வந்திருந்த அந்த பத்திரிகையோட நிருபர் விஷயத்தை எப்படியோ கேள்விப்பட்டு ஸ்பாட்டுக்கு வந்துட்டார் ஸார்...''

கான்ஸ்டபிள் சொல்லிக் கொண்டிருந்த அந்த விநாடி - ஜி.ஹெச் மார்ச்சுவரியின் வெள்ளை நிற வேன் ஒரு சின்ன இரைச்சலோடு பாலத்துக்கு அருகே வந்து நின்றது. நீல நிற யூனிபார்ம் தரித்த சிப்பந்திகள் அழகான ஸ்ட்ரெச்சரோடு வெளிப்பட்டார்கள். கன்னைய பிரசாத் சப்-இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

''மிஸ்டர் கதிரேசன்... பாடியை போஸ்மார்ட்டம் பண்ண பிரைமரி ஸ்டெப்ஸ் எடுக்கணும்... கொஞ்சம் கவனிங்க...''

''எஸ்...ஸார்'' - கதிரேசன் நகர்ந்தார்.

''கான்ஸ்டபிள்...!''

''ஸார்''

''ஆள் யாருன்னு கண்டு பிடிச்சீங்களா...?''

''அந்த ஆள் வேலை செய்யற கம்பெனி விசிட்டிங் கார்டே அவரோட சட்டைப் பையில இருந்தது ஸார். போன் நெம்பர்க்கு காண்டாக்ட் பண்ணி ஆளை கன்பர்ம் பண்ணிட்டோம். கொலையான ஆள் பேர் சபரி... அம்மாவோடு இதே ஊர்ல தான் தங்கியிருக்கார். டெத் ந்யூஸை அவங்க அம்மாகிட்டே சொல்லப் பண்ணப் போனேன் ஸார்.. வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்ல விசாரிச்சேன்... அந்த அம்மாவுக்கு நேத்து ராத்திரி திடீர்ன்னு ப்ரஷர் அதிகமாயி அன்கான்ஷியஸ் ஆயிட்டாங்களாம். கோமா ஸ்டேஜ். ஜி.ஹெச்ல அட்மிட் பண்ணியிருக்காங்களாம்...''

''அடப் பாவமே!'' என்றார் கன்னைய பிரசாத். மேற்கொண்டு ஏதோ சொல்வதற்கு வாயைத் திறந்த விநாடி சப்-இன்ஸ்பெக்டர் கதிரேசன் அவசரக் குரலில் கூப்பிட்டார்.

''ஸார்''

திரும்பினார் கன்னைய பிரசாத்.

''என்ன கதிரேசன்?''

''ஒரு நிமிஷம் இப்படி வர்றீங்களா ஸார்...?''

''எனிதிங் இம்பார்ட்டெண்ட்...?''

''எஸ்... ஸார்...''

கன்னைய பிரசாத் சபரி கிடந்த இடத்தை நோக்கிப் போனார். ஸ்ட்ரெச்சரில் ஏறியிருந்த சபரியின் தலைவிரிப்பு விலகியிருக்க கோரமாய் தெரிந்தது.

கதிரேசன் சபரியின் தலை அருகே வந்தார்.

''தலை முடியைப் பார்த்தீங்களா ஸார்...?''

கன்னைய பிரசாத் சபரியின் தலைமுடியைப் பார்த்தார். சீவியிருந்த கிராப் காதோரத்திலிருந்து விலகி-வித்தியாசமாய் இருந்தது.

சபரியின் அருகே வந்தார். உற்றுப் பார்த்துவிட்டு கதிரேசனிடம் திரும்பினார். ''விக் மாதிரி தெரியுது.'' - சொல்லிக் கொண்டே உருவினார். சிரமமான உருவல்.

சபரியின் தலையிலிருந்த அந்தச் சுருள் சுருளான விக் கையோடு வந்தது. நெற்றிப் பரப்பிலும், பின்னந்தலையிலும் ஏகமாய் வழுக்கையை வாங்கியிருந்தான் சபரி.

வழுக்கையின் நடுவில் ஒரு தழும்பும் தெரிந்தது.

கன்னைய பிரசாத் அவனையே பார்த்தார்.

## 13

''அபிநயா''

மாடி ஜன்னல் வழியாக கீழே தெரிந்த தோட்டத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அபிநயா - அப்பாவின் குரல் கேட்டு திரும்பினாள். இரண்டு நாளில் உலர்ந்துபோயிருந்தாள்.

'என்னப்பா?' என்கிற மாதிரி பார்த்தாள்.

''பேப்பர்ல அந்த சபரியைப் பத்தி ஒரு நியூஸ் வந்திருக்கு. படிச்சு பார்க்கப் பார்க்க ஆச்சர்யமாயிருக்கு. நீ அவன்கிட்டயிருந்து தெய்வாதீனமா தப்பிச்சிருக்கேம்மா.''

''என்னப்பா சொல்றீங்க?''

''அந்த நியூஸை படிச்சு பாரும்மா.''

பேப்பரை மடித்து அந்த செய்தி இருந்த பக்கத்தை நீட்டினார் சந்தான கிருஷ்ணன்.



அபிநயா வாங்கி பார்வையை அதன் மேல் போட்டாள்.

மாஜி தூக்குத்தண்டனை கைதி
மருதமலை அருகே கொலை.

இதுபற்றி கூறப்படுவதாவது:

நேற்றைக்கு முன்தினம் மருதமலை போகும் ரோட்டில் 5-வது மீட்டர் கல் அருகே - பாலத்துக்கு கீழே ஒரு இளைஞரின் பிணம் கிடப்பதாக போலீசுக்கு தகவல் வந்தது. போலீஸார் விரைந்து போய் பிரேதத்தைக் கைப்பற்றினார்கள். அவருடைய சட்டைப் பையில் இருந்த விசிட்டிங் கார்டு மூலம் அவருடைய பெயர் சபரி என்று தெரிய வந்தது. மேலும் அவர் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிற விபரமும் தெரிந்தது. இது முன் வந்த செய்தி.

ஆனால் நேற்றுக். காலையில் இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் பிரேதத்தை போஸ்ட் மார்ட்டம் அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது - பிரேதத்தின் தலைமுடி கையோடு வரவே, உண்மை புலனாகியது. சபரியின் தலை முழுவதும் வழுக்கையாக இருந்தது மட்டுமல்லாமல் வழுக் கையின் நடுவில் தழும்பொன்றும் இருந்தது.

சில வருடங்களுக்கு முன்னால் ஆந்திர போலீஸார் தமிழக போலீசுக்கு அனுப்பி விருந்த குறிப்பொன்றில் வேங்கட நாராயணா என்னும் பெயருள்ள தூக்குத்தண்டனை கைதி ஒருவன் சிறையிலிருந்து தப்பிவிட்டதாகவும் - அழகான தோற்றம் கொண்ட அவனுக்கு தலைமட்டும் வழுக்கையாய் இருந்ததாகவும் - வழுக்கையின் மையத்தில் தழும்பொன்று காணப்பட்டதாகவும் கூறியிருந்தார்கள். போட்டோவையும் இணைத்திருந்தார்கள். அப்போது B-1 போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டராய் இருந்த கன்னைய பிரசாத் வேங்கட நாராயணாவைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு முடியாமல் போகவே அதை அப்படியே விட்டுவிட்டார்.

அன்றைக்கு ஆந்திரா போலீஸாரிடமிருந்து

தப்பிய தூக்குத் தண்டனை கைதி வேங்கட நாராயணா பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் தன் முக அமைப்பை லேசாய் மாற்றிக் கொண்டு-சுருள் சுருளான முடியோடு கூடிய விக்கையும் பொருத்திக் கொண்டு-கோவை நிறுவனம் ஒன்றில் வேலைக்கு சேர்ந்து தன் அம்மா வோடு வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறான். பெயரையும் சபரி என்று மாற்றி, நன்றாகத் தமிழ் பேசி எல்லோரையும் நம்ப வைத்திருக் கிறான், இந்த மாஜி கைதி. இவன் ஏற்கனவே திருமண மானவன் என்றும், தன் மனைவி சோரம் போனாள் என்பதற்காக அவளை வெட்டிக் கொன்றவன் என்றும் ஆந்திரா போலீஸாரின் குற்ற அறிக்கை கூறுகிறது.

இவனை என்ன காரணத்திற்காக, யார் கொன்றார்கள் என்பது புரியாத புதிராக இருப்பதால் போலீஸார் திணறிக் கொண்டி ருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் நிருபர்களிடம் கூறுகையில், 'இந்த கொலையில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருப் பது உறுதியாகத் தெரிகிறது' என்று கூறினார்.

பேப்பரில் இருந்த செய்தியை படித்து முடித்த அபிநயா முகத்தில் ஏராளமான அதிர்ச்சியை வாங்கியிருந்தாள். வியர்த்துப் போயிருந்தாள்.

''அம்மா... என்னம்மா சொல்றே?''

''என்னால நம்பவே முடியலைப்பா.''

''போலீஸ் ஊர்ஜிதம் பண்ணிட்டாங்கம்மா. ஹிண்டு பேப்பர்ல இன்னும் டீடெய்லா போட்டிருக்கான். ஆந்திரா டி.ஐ.ஜி. ஸ்பாட்டுக்கு வந்து கன்பர்ம் பண்ணியிருக்கார். வேங்கட நாராயணாவோட போட்டோவும், சபரியோட போட்டோவும் ஒத்துப் போகுதாம்-பிங்கர் பிரிண்ட்ஸ் துல்லியமா பொருந்துதாம்.''

''சபரி...! சபரி...! நீ... நீங்க... தப்பிச்சுட்டு வந்த தூக்குத் தண்டனைக் கைதியா...? அதான் ரோட்ல நடக்கும்போது ட்ராபிக் கான்ஸ்டபிளை பார்த்தாக்கூட ஒதுங்கிப் போனீங்களா?''

அபிநயா கன்னத்தில் கை வைத்து பெருமூச்சுவிட்டாள்.

ஏதோ ஒரு கண்டத்திலிருந்து தப்பித்த உணர்வு



மனசு பூராவும் இருந்தது. சபரியோட சாவைப் பத்தின கனமான துன்பம் மெல்ல கரைய ஆரம்பித்தது.

''அபிநயா!''

''ம்!''

''இந்தக் கொலையில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருக்கான்னு போலீஸ் மோப்பம் பிடிக்க ஆரம்பிச்சுட்டாங்க. நீ கொஞ்ச நாளைக்கு வெளியே போகாதேம்மா.''

தலையாட்டினாள் அபிநயா.

## 14

ஆனால்....

மூன்றாவது நாளே - அபிநயாவைப் பத்தி விசாரிப்பதற்காக - இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் சந்தான கிருஷ்ணனைத் தேடிக் கொண்டு வந்தார்.

## 15

உடம்பு பூராவும் நடுக்க ரேகைகள் ஓடினாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உதட்டுக்கு ஒரு புன் சிரிப்பைக் கொடுத்து ''வாங்க இன்ஸ்பெக்டர்!'' என்றார் சந்தான கிருஷ்ணன்.

ஆபீஸ் அறையில் ஏ.ஸி. முழு வேகத்தில் செயல்பட்டாலும் வேர்த்தார்.

''ஐ'யாம் கன்னைய பிரசாத். இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ்...'' - கையை நீட்டினார் க.பி.

''ப்ளீஸ்ட் டு மீட் யூ''

உட்கார நாற்காலியைக் காட்டினார் சந்தான கிருஷ்ணன்.

கையோடு கொண்டு வந்திருந்த ப்ரீப்கேஸை மேஜையின் ஓரமாய் வைத்துவிட்டு சந்தான கிருஷ்ணனை புன்னகையோடு பார்த்தார் கன்னைய பிரசாத்.

''மிஸ்டர் சந்தான கிருஷ்ணன்..! உங்க டாட்டர்

பேர் அபிநயாவா...?''

''ஆமாம்...''

''அழகான பேரா வெச்சிருக்கீங்க...''

''தேங்க் யூ...''

''அபிநயாவுக்கு துணிச்சல் ரொம்பவும் அதிகமோ...?''

''வாட் டு யூ மீன் இன்ஸ்பெக்டர்?''

''துணிச்சல் இல்லாமே இருந்தா, மருதமலை ரோட்ல அந்த பொட்டல் காட்டுல தன்னந்தனியா பாறைமேல உட்கார்ந்திட்டிருக்க முடியுமா...?''

''இ...இ... இன்ஸ்பெக்டர்...''

குழறிக்கொண்டே எழுந்தார் சந்தானகிருஷ்ணன்.

''உட்காருங்க.'' - கையமர்த்திய கன்னைய பிரசாத் - அவர் உட்கார்ந்ததும் கேட்டார். ''அந்த நேரத்துக்கு அந்த இடத்துக்கு அபிநயா எதுக்காக போனா?''

சந்தான கிருஷ்ணன் சுதாரித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''இன்ஸ்பெக்டர்! நீங்க யாரையோ போய் விசாரிக்க வேண்டிய கேள்வியெல்லாம் என்கிட்ட வந்து கேட்டுட்டிருக்கீங்க. எதுக்காக அபிநயா வைப் பத்தி விசாரிக்க வந்திருக்கீங்கன்னும் எனக்குத் தெரியலை. விபரத்தைச் சொன்னா பரவாயில்லை.''

கன்னைய பிரசாத் தோள்களைக் குலுக்கிக் கொண்டார்.

''உங்களுக்கு விபரம் தெரிஞ்சாலும் தெரியாத மாதிரி கேட்கறீங்க. ஓ.கே. சொல்றேன். வெங்கட நாராயணா என்கிற சபரியை மருதமலை ரோட்ல யாரோ கொலை பண்ணியிருக்காங்க. கொலைக் கான காரணம் தெரியலை. கொலை செஞ்சது யார்ன்னும் புரியலை. கொலை நடந்த அன்னிக்கு ராத்திரி அந்த ஸ்பாட்டுக்குப் பக்கத்திலிருந்த ஒரு பாறை மேல ஒரு பொண்ணு உட்கார்ந்திட்டிருந் ததா ஆடு மேய்க்கிற மாதய்யன் சொல்லியிருக் கான். அந்தப் பொண்ணு உங்க டாட்டர்தான்னு நான் சந்தேகப்படறேன் மிஸ்டர் சந்தான கிருஷ்ணன். அபிநயா அன்னிக்கு ராத்திரி அங்கே இருந்தாளா?''



சந்தான கிருஷ்ணன் வலுக்கட்டாயமாகச் சிரித்தார். ''அபிநயா எதுக்காக அந்த இடத்துக்கு போகணும்? நீங்க சொல்ற ராத்திரியில அவ வீட்லதான் இருந்தா.''

''பொய்''

''இன்ஸ்பெக்டர்! இந்த கோயமுத்தூர்ல என்னைத் தெரியாதவங்க கம்மி. எல்லா சோஷியல் வெல்பேர் அஸோஸியேஷனிலும் மெம்பராவோ தலைவராவோ இருக்கேன். நான் பொய் சொல்ற ஜாதியில்லை.''

''ஸாரி மிஸ்டர் சந்தானகிருஷ்ணன்; மறுபடியும் நீங்க பொய் சொல்றீங்க. 'நான் பொய் சொல்ற ஜாதியில்லை'ன்னு பொய் சொல்றீங்க. இனி மேலும் பொய்பேச நான் உங்களை அனுமதிக்கப் போறதில்லை. இது யாரோட டம்பப்பையின்னு சொல்ல முடியுமா?''

ப்ரீப்கேஸைத் திறந்து அந்த டம்பப் பையை வெளியே எடுத்தார் கன்னைய பிரசாத்.

சந்தான கிருஷ்ணன் நீளமான அதிர்ச்சிக்குப் போனார்.

டம்பப் பையை பார்த்த மாத்திரத்திலேயே புரிந்தது.

அது அபிநயாவின் டம்பப்பை.

கன்னைய பிரசாத் புன்னகைத்தார். ''அவசரப்பட்டு இது அபிநயாவோட டம்பப்பை இல்லைன்னு அநாவசியமா பொய் சொல்லி டாதீங்க சந்தானகிருஷ்ணன், டம்பப்பைக்குள்ளே இருக்கிற வஸ்துவையும் ஒரு பார்வை பார்த்துடுங்க...''

டம்பப் பையை எடுத்து - ஜிப்பைப் பிரித்து அந்த வஸ்துவை எடுத்து மேஜையின் மேல் வைத்தார் கன்னைய பிரசாத்.

பிஸ்டல்! அபிநயா கையோடு கொண்டு போயிருந்த பிஸ்டல்.

இன்னும் அதிர்ந்தார் சந்தானகிருஷ்ணன்.

அவருடைய லைசென்ஸ் பிஸ்டல்.

''இது உங்களோட பிஸ்டல் இல்லைன்னு சொல்லிட முடியாது சந்தானகிருஷ்ணன். இந்த பிஸ்டலோட நெம்பரையும் - லைசென்ஸ்

நெம்பரையும் கலெக்ட்ரேட் ஆபீஸ்ல வெரிஃபை பண்ணின பிறகுதான் நான் உங்ககிட்ட வர்றேன்... உங்க பேர்ல நீங்க லைசென்ஸ் வாங்கியிருந்த பிஸ்டல்.''

சந்தான கிருஷ்ணன் சாக்பீஸாய் வெளுத்தார்.

கன்னைய பிரசாத் தொடர்ந்தார்.

''இந்த டம்பப் பையை அபிநயா கொண்டுவந்திருக்கா. அவ உட்கார்ந்திருந்த பாறைத் திட்டுக்குப் பக்கத்துல இது கிடந்திருந்தது... ஆள் நடமாட்டம் இல்லாத அந்த பாறைப் பகுதியை இன்னிக்கு நான் பார்க்க கிளம்பின நேரம் நல்ல நேரம். இல்லேன்னா நாலைஞ்சு நாள் ஆகியும் யார் கண்ணிலேயும் படாத அந்த டம்பப்பை என்னோட கண்ணுல மட்டும் படுவானேன்?''

''இ... இன்ஸ்பெக்டர்...'' - பேச்சு வராமல் சிரமப்பட்டார் சந்தானகிருஷ்ணன். கன்னைய பிரசாத் கேட்டார். ''இப்ப சொல்லுங்க, அபிநயா அந்த கொலை நடந்த ஸ்பாட்ல இருந்தாளா இல்லையா?''

''இருந்தா...''

''இது அவளோட டம்பப்பைதானே?''

''ஆமா...''

''பிஸ்டல் உங்களோடதுதானே?''

''ஆமா...''

''எல்லாத்தையும் ஒத்துகிட்டீங்க. இதையும் ஒத்துகிட்டா தேவலை சந்தானகிருஷ்ணன். அபிநயா எதுக்காக சபரியைக் கொன்னா...?''

''நோ... இன்ஸ்பெக்டர்...! அவ கொலை செய்யலை...''

கன்னைய பிரசாத் புன்னகைத்தார். ''அவ கொலை செஞ்சாளா இல்லையான்னு கோர்ட் தீர்மானிக்கட்டும்.'' சந்தானகிருஷ்ணன் வீறிட்டார். ''இன்ஸ்பெக்டர்! அபிநயாவை அரஸ்ட் பண்ணி ஸ்டேஷனுக்கு கொண்டுபோய் அவமானப் படுத்திடாதீங்க... அந்தக் கொலையை அவ செய்யலை.''

''பின்னே யார்?''

''நான்தான் இன்ஸ்பெக்டர்...''



தலைகுனிந்தார் சந்தானகிருஷ்ணன்.

கன்னையா பிரசாத் கண்களில் அதிர்ந்தார்.

''நீங்களா?''

''ஆமா இன்ஸ்பெக்டர். அது ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம்'' என்று ஆரம்பித்து அபிநயா-சபரி கடத்தல் நாடக விபரம் முழுவதையும் சொன்னார் சந்தானகிருஷ்ணன்.

''எனக்கு அது நாடகம்ன்னு தெரியலை இன்ஸ்பெக்டர். நிஜமாகவே அபிநயாவை யாரோ கடத்திட்டு போயிட்டதா நினைச்சேன். அவன் சொன்னபடியே பத்துலட்ச ரூபாயோடு சூட்கேஸை பாலத்துக்கு கீழே போனேன். சூட்கேஸை பாலத்துக்கு கீழே வெச்சிட்டு கார்ல திரும்பினேன். இருநூறு மீட்டர் தூரம் வந்ததும் காரை ஒரு மரத்துக்குப் பின்னாடி நிறுத்திட்டு நான் என்னோட சைலன்சர் ரிவால்வரோடு இருட்டுல ஒளிஞ்சு பாலத்துக்குப் பக்கமா வந்தேன். அதே சமயம் சபரியும் சூட்கேஸை எடுக்கிறதுக்காக பாலத்துக்குக் கீழே போனான். அவனோட முழங்காலைப் பார்த்து சுட்டேன். ஆள் கீழே விழுந்ததும் போலீசுக்கு கொண்டு போய் ஹேண்ட் ஓவர் பண்ண நினைச்சேன். ஆனா அந்த இருட்டுல குறி மாறிடுச்சு இன்ஸ்பெக்டர். சபரியோட முழங்காலுக்கு குறிவெச்ச தோட்டா அவனோட நெஞ்சுல பாய்ஞ்சுடுச்சு. ஒரு நிமிஷம் நான் அப்படியே திகைச்சுப் போயிட்டேன். அப்புறம் சூட்கேஸை எடுத்துகிட்டு வந்ததும் மனசுல ஒரு பயம். 'சுடப்பட்ட ஆள் இருக்கிறானா, இறந்துட்டானா?' - அப்படி அவன் இறந்துபோயிருந்தா பாடியை டிஸ்போஸ் செய்ய நினைச்சு கம்பெனியோட டெம்போ வேனை எடுத்துகிட்டு வந்தேன். அப்படி வந்தப்பதான் பாலத்துக்குப் பக்கத்துல நின்னுட்டிருந்த அபிநயாவைப் பார்த்தேன். அவ இந்தக் கொலைப் பழியில் மாட்டிக்கக் கூடாதேங்கிற எண்ணத்திலும், சபரியோட கொலைக்கு காரணம் நான்தான்ங்கிற நினைப்பு அவ மனசுல விழுந்துடக் கூடாதுங்கிற எண்ணத்திலும் டெம்போ வேனிலிருந்த சதீர் ஆல்கஹாலை கர்ச்சிப்புல நனைச்சு-அபிநயாவை

Registere
CRIME NO



மயக்கத்துல ஆழ்த்தி வீட்டுக்கு கொண்டு
வந்தேன்.''

''சபரியை சுட்டது நீங்கதான்னு அபிநயாவு
தெரியாதா?''

''தெரியாது இன்ஸ்பெக்டர்...''

கன்னையபிரசாத் சிரித்தார்.

''இனிமே நீங்க தாராளமா சொல்லலாம் சந்
கிருஷ்ணன்.''

சந்தானகிருஷ்ணன் குழப்பம
இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

கன்னையபிரசாத் ப்ரீப்கேஸைத் திறந்து
பழுப்பு நிற ஃபைலை எடுத்து ஒரு பக்க
எடுத்துக் காட்டினார்.

''ஸீ... மிஸ்டர் சந்தானகிருஷ்ணன் - இது
ஷூட் அட் சைட் ஆர்டர். அஞ்சு வருஷங்க
முன்னாடி ஆந்திரா போலீஸ் பிரகடனப்படுத்
ஆர்டர். பிணமாகவோ உயிரோடவோ வே
நாராயணனை போலீஸ் வசம் ஒப்படை
வர்களுக்கு அவார்டும் மென்ஷன் பண்
யிருக்காங்க''

''இன்ஸ்பெக்டர்...!''

நாலைந்து நாட்களுக்குப் பிறகு, அ
நிமிஷம்தான் நெஞ்சு நிறைய சந்தோஷப்பட்
சந்தானகிருஷ்ணன்.

கன்னைய பிரசாத் தொப்பியை எடு
பொருத்திக் கொண்டார். ''உங்க கிட்ட கொ
நேரம் விளையாடிப் பார்த்தேன் - சந்
கிருஷ்ணன். இந்தாங்க உங்க பிஸ்
அபிநயாவோட டம்பப் பை...''

கையைப் பற்றி குலுக்கிவிட்டு..

வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கிப் போன
இன்ஸ்பெக்டர்.

முற்றும்.